# 3. வேளாண்மை, மீன்பிடி, காடாக்கல்

## 3.1. உற்பத்திப் போக்குகள்

சாதகமான வானிலை நிலைமைகள், முக்கிய ஏற்றுமதிப் பயிர்களுக்கான கவர்ச்சிகரமான விலைகள் என்பன காரணமாக 1995 இல் பெரும்பாலான வேளாண்மைப் பயிர்களின் செயலாற்றம் முன்னேற்றமடைந்தது. இது விசேடமாக இறப்பர் விலைகளுக்கான ஓர் சிறந்த ஆண்டாகும். தேயிலையினதும் நெல்லினதும் உற்பத்தி 1994 இன் உச்ச உற்பத்தி மட்டங்களை முறையே 2 சதவீதத்தாலும் 5 சதவீதத்தாலும் விஞ்சியது. தெங்கு உற்பத்தி 5 சதவீதத்தால் அதிகரித்ததுடன் 1986 இன் பின்பு குறிப்பிடத்தக்க வெளியீட்டையும் பதிவு செய்தது. இறப்பர் உற்பத்தியில் ஓர் சிறிய மேம்பாடு மட்டுமே காணப்பட்டவேளையில் சீனி உற்பத்தி 1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இவ்வாண்டில் சில பயிர்கள் கணிசமான அதிகரிப்புக்களைக் காட்டியதுடன் ஏனைய வேளாண்மைப் பயிர்களின் உற்பத்திப்போக்கு கலப்பானதாக இருந்தது. ஆழ்கடல் மற்றும் நன்னீர் மீன் உற்பத்தி அதிகரித்ததன் காரணமாக இவ்வாண்டில் மீன் உற்பத்தி 6 சதவீதத்தால் அதிகரித்தது.

அட்டவணை 3.1

முக்கிய வேளாண்மை விடயங்களின் உற்பத்தியும் விலை மாற்றங்களும்

| விடயம் | அலகு | உற்பத்தி | | 1995இல் மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|
| | | 1994 | 1995 | உற்பத்தி | விலைகள் |
| தேயிலை | ப.இ.கி.கி. | 242 | 246 | 2 | 11 |
| இறப்பர் | ப.இ.கி.கி. | 105 | 106 | 0 | 43 |
| தெங்கு | ப.இ. காய்கள் | 2,622 | 2,755 | 5 | 13 |
| நெல் | 000 மெ.தொ. | 2,684 | 2,810 | 5 | -2 |
| சீனி | 000 மெ.தொ. | 72 | 71 | -1 | -3 |
| மீன் | 000 மெ.தொ. | 224 | 238 | 6 | 22 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## 3.2. வேளாண்மைக் கொள்கை

பெருந்தோட்டத்துறைக் கொள்கை மிகவும் புலப்படுவதாக இருந்ததுடன் இத்துறையின் செயல் திறனை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது. 1995 இல், அரசிற்குச் சொந்தமான பிராந்திய பெருந்தோட்ட கூட்டுநிலையங்களின் தனியார் முகாமைத்துவத்திற்கான தற்போதைய 5 ஆண்டுக் குத்தகை ஒப்பந்தங்களை 1992 இல் இருந்து செயற்படும் வகையில் 53 வருடங்களுக்கு நீடிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு தொடங்கியது. பெருந்தோட்டத்துறையல்லாத வேளாண்மைத்துறை பல காரணிகளின் இடைச் செயலாற்றத்தினால் பாதிக்கப்பட்டது. இவ்வாண்டில் அதிசிறப்பான நெல் அறுவடை காணப்பட்டதுடன், இது அரிசி விலைகளின் கீழ்நோக்கிச் செல்வதற்கான தாக்கத்தையும் கொண்டிருந்தது. நெல் வேளாண்மையாளர்களுக்கு எதிராக சார்பு ரீதியான விலை மாற்றங்களை உருவாக்கிய கோதுமை மா உதவிக் கொடுப்பனவினால் இந்த நிலைமை மேலும் மோசமாக்கப்பட்டது. நுகர்வோர் கேள்வி இலாபகரமான கோதுமையை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளை நோக்கி நகர்ந்தமையினால் அரிசி விலைகள் மேலும் கீழ் நோக்கிய தாக்கத்தினைக் கொண்டிருந்தன. உத்தரவாத விலையில் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு நெற் சந்தைப்படுத்தும் சபை (நெசச) சந்தையில் கூடுதலாக நுழைவதற்கான நியாயப்படுத்தலாக இது விளங்கியது. நெற்சந்தைப்படுத்தும் சபையின் தொழிற்பாடுகள் ஏற்கனவே நிறுவப்பட்ட தனியார் சந்தைப்படுத்தும் முறையுடன் தலையிட்டன. அதேவேளை நெசச அரிசியின் ஒன்றுசேர்ந்த கையிருப்பை விற்பனை செய்ய இயலாது காணப்பட்டதுடன் உள்நாட்டு வங்கித்துறைக்கு பாரிய கடன்பாட்டையும் (ரூபா 2 பில்லியன்) கொண்டிருந்தது. மேலதிகமாக, குறிப்பிட்ட வேளாண்மை உற்பத்திப் பொருட்களின் (உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், மிளகாய்) இறக்குமதி உரிமம் வழங்கல் 1995 இலும் தொடர்ந்தது. இறக்குமதி உரிமங்களை வழங்கும் திட்டங்கள் எப்பொழுதும் தொகைரீதியான இறக்குமதிக் கட்டுப்பாடுகளாக விளங்கியதுடன் நுகர்வோருக்கு பாரிய செலவை ஏற்படுத்தி சந்தைகளின் திறமையான தொழிற்பாட்டிற்கு எதிரான ஓர் தடையாகவும் விளங்கின. மேலும் புலப்படும் மாறுபாடுகளைக் கொண்ட தீர்வை முறையொன்றினால் நுகர்வோருக்கான செலவைக் குறைக்க இயலுமாவதோடு வேளாண்மையாளருக்கு போதிய பாதுகாப்பினை வழங்கக்கூடியதாகவும் இருக்கும். இத்துறையில் புலப்படுவதும் உறுதியானதுமான கொள்கையொன்று, இவ்வேளாண்மை உற்பத்திகளின் களஞ்சியப்படுத்தல் மற்றும் பகிர்ந்தளிப்பு வலையமைப்பில் தனியார்துறையின் பங்களிப்பை ஊக்குவித்திருக்கலாம். இதேவேளையில் 1994 இல் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்ட வளமாக்கி உதவுதொகைக் கொடுப்பனவுத் திட்டம் மொத்தச் செலவு அதிகரிப்புடன் 1995 இலும் தொடர்ந்தது.

எனினும் மூலவள கட்டுப்பாடுகள் காரணமாக வளமாக்கி இறக்குமதியாளர்களுக்கு அரசினால் வழங்கப்படும் உதவிக் கொடுப்பனவுகளின் தீர்ப்பனவில் தாமதங்கள் காணப்பட்டன.

மேலே குறிப்பிட்டவாறு இவ்வாண்டில் வேளாண்மைத்துறையில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய அமைப்புரீதியான மாற்றம் என்னவெனில் அரசிற்குச் சொந்தமான ஒன்பது பிராந்திய பெருந்தோட்ட கூட்டுநிலையங்களின் (பிபெகூநி) முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் குத்தகைகளை 53 வருடங்களுக்கு நீடித்தமையேயாகும். 23 பிபெகூ நிலையங்கள், 5 வருட ஒப்பந்தக் காலப்பகுதிக்கு இலாபப்பங்கீட்டு அடிப்படையில் தனியார் கூட்டு நிலையங்களால் முகாமைப்படுத்தப்பட்டன. பெரும்பாலான தனியார் முகாமைக் கூட்டு நிலையங்கள் உற்பத்தியை அதிகரிக்கக் கூடியதாகவும், உற்பத்திச்செலவு அதிகரிப்புக்களைக் கட்டுப்படுத்தக்கூடியதாகவும் விளங்கின. எனினும் ஒப்பந்தத்தின் குறுகிய காலத்தன்மை காரணமாக பெருந்தோட்டத்துறையில் அவர்கள் நீண்டகால முதலீடுகளில் முயற்சி எடுக்கவில்லை. சொத்தை நீண்டகாலத்திற்கு உடைமையாகக் கொண்டிருக்கக் கூடிய நியாயமான காலப்பகுதி இல்லாத முகாமைத்துவத்திற்கு இது ஓர் உதாரணமாகும். இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் தனியார் மயமாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பெருந்தோட்டத்துறையின் செயல் திறனை முன்னேற்றுவதற்கு அரசு, 1992 இலிருந்து பயனுறும் வகையில் 53 வருட காலப்பகுதிக்கு நிலத்தைக் குத்தகைக்கு விடுவதன் மூலம் பெருந்தோட்டக் கூட்டுநிலையங்களுடன் நீண்டகால குத்தகை உடன்படிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்ததுடன், முகாமைத்துவத்தின் முழு இடர்களையும் நன்மைகளையும் தனியார்துறைக்கு சுமத்தியது.

அரசு தொழில் முயற்சிகள் சீரமைப்பு ஆணைக்குழு (அதொசீஆ) இவ்வாண்டில் நீண்டகால குத்தகைக்காக 10 பிரதேச பெருந்தோட்ட கூட்டுநிலையங்களைக் குறிப்பிட்டுள்ளதோடு இலாபம் ஈட்டும் பிரதேச பெருந்தோட்ட கூட்டு நிலையங்களின் மொத்தப் பங்குகளின் 51 சதவீதம் பிரதேச பெருந்தோட்ட கூட்டு நிலைய முகாமைத்துவ கூட்டு நிலையங்களுக்கு விற்பனை செய்யப்படவுள்ள வேளையில் நட்டத்தில் இயங்கும் கூட்டு நிலையங்களின் மொத்தப் பங்குகளின் 51 சதவீதம் பங்குப் பரிவர்த்தனையில் "எல்லாம் அல்லது ஒன்றும் இல்லை" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படவுள்ளது. கூட்டுநிலையத்தின் மொத்தப் பங்குகளின் 20 சதவீதம் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படவுள்ளதுடன் இவற்றில் 8 சதவீதமானவை பங்கொன்று ரூபா 10/- என்ற நிலையான விலையில் சிறு முதலீட்டாளர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. எஞ்சிய 12 சதவீதம் விலைக்கோரல் அடிப்படையில் விற்பனை செய்யப்படவுள்ளது. (விலைக்கோரலை சமர்ப்பித்த ஒவ்வொருவரும் தொகுதியின் 4 சதவீத உச்சவரம்பிற்கு மட்டுப்படுத்தப்பட்டனர்) 10 சதவீதப் பங்குகள் பெருந்தோட்டத்தின் தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், எஞ்சிய 19 சதவீதத்தை விற்பனை செய்வதுபற்றி அதொசீ, ஆணைக்குழு இதுவரை தீர்மானிக்கவில்லை. தேசிய நலன் மற்றும் தொழிற்சங்க நலன்களைக் கருத்திற்கொண்டு அரசு ஒவ்வோர் பிபெகூ நிலையங்களிலும் மிக முக்கிய பங்குடைமையொன்றினைக் கொண்டிருக்கும். ஒவ்வோர் பிபெகூ நிலையத்தினதும் மூலதனம் ரூ. 2,000 இலட்சமாக மதிப்பிடப்பட்டதுடன் அதன் செலவுகள் கழிந்த முழுப் பெறுமதியின் தேறலுக்காகக் காப்பீடும் செய்யப்பட்டுள்ளது. பிபெகூ நிலையமொன்றின் பங்குடைமையின் வெளிநாட்டுச் சொத்து உடைமை 49 சதவீதத்திற்கு மட்டுப்பட்டிருந்தது.

இலாபம், ஈட்டும் ஆறு பெருந்தோட்ட முகாமைக் கூட்டுநிலையங்கள் கொட்டகல, போகவந்தலாவ, அகலவத்த, கேகாலை, களனிப் பள்ளத்தாக்கு, ஹொரன ஆகிய பிபெகூ நிலையங்கின் 51 சதவீதப் பங்குகளை கொள்வனவு செய்வதற்கான கடப்பாட்டினைக் கொண்டிருந்தன. பங்கு வழங்கலின் விலை குறிப்பிட்ட பாகத்திற்கான பொதுமக்களின் உதவு தொகைகள் மிகக்குறைவாகக் காணப்பட்டமையினால் எஞ்சிய தொகையினை காப்பீட்டாளர்களே கொள்வனவு செய்ய வேண்டியிருந்தது. நட்டத்தில் இயங்கிய வட்டவலை, மடுல்சீமா, மஸ்கெலியா மற்றும் அக்கரப்பத்தனை பிரதேச பெருந்தோட்டக் கூட்டு நிலையங்களின் 52 சதவீதப்பங்குகள் "எல்லாம் அல்லது ஒன்றுமில்லை" என்ற அடிப்படையில் கொழும்புப் பங்குப்பரிவர்த்தனைக்கு வழங்கப்பட்டன. 1995 இறுதியில் (அக்கரைப்பத்தனைப் பிரதேச பெருந்தோட்டக் கூட்டுநிலையம் தவிர்ந்த) ஒன்பது பிரதேச பெருந்தோட்டக் கூடடுநிலையங்கள் தனியார்மயமாக்கப்பட்டன.

மரப்பயிர்த்துறையில் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு மீள்நடுகை, புதிய நடுகை, இடைப்பயிர்ச் செய்கை (தெங்கு) போன்ற நடவடிக்கைகளுக்கான உதவிக் கொடுப்பனவுகளும் வளமாக்கி உதவிக் கொடுப்பனவுகளும் 1995 இலும் தொடர்ந்தன. ஏனைய ஏற்றுமதிப்பயிர்களின் சந்தைப்படுத்தலுக்கான வசதிகளை வழங்கும்

பொருட்டும் தரத்தினை மேம்படுத்தி ஏனைய ஏற்றமதிப்பயிர்களின் உற்பத்தியாளர்களுக்கு கூடிய வருமானத்தை உறுதிசெய்யும்பொருட்டும் 1995 இல் கறிவாசனைத் திரவியங்கள் மற்றும் அதனுடன் இணைந்த பயிர்கள் சந்தைப்படுத்தும் சபை நிறுவப்பட்டது. இத்துறைக்கும் முன்பு போலவே தீவிர விரிவாக்கச் செயற்றிட்டங்கள், மேம்பட்ட நடுகைப் பொருட்கள், கொடுகடனுக்கான இலகுவான வழி என்பனவற்றால் ஆதரவு வழங்கப்பட்டது.

உணவுப்பாதுகாப்பினை எய்துவதற்காக குறிப்பாக நெல்லின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான முக்கிய கொள்கை வழிமுறையொன்று காணப்பட்டது. தரமான விதைகளின் வழங்கல், ஒருங்கிணைக்கப்பட்ட கிருமி நாசினி முகாமைத்துவம், செலவைக் குறைப்பதற்கும் விளைச்சலை அதிகரிப்பதற்குமான நேரடியான வளமாக்கிப் பயன்பாடு, உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக பெரும்போகத்தில் நீண்டகால வகைகளைப் பயன்படுத்தல் என்பனமீது முக்கிய வலியுறுத்தல் காணப்பட்டது. எனினும் 1994 இறுதியில் மேற்கொள்ளப்பட்ட கோதுமை மாவிற்கான உதவிக்கொடுப்பனவுக் கொள்கை 1995 இலும் செயற்பட்டதால் அவை நெற்றுறையையும் அதேபோன்று துணை உணவுப் பயிர்கள் துறையையும் கடுமையாகப் பாதித்தன.

பழைய கடன்களின் 25 சதவீதத்தினை வேளாண்மையாளர்கள் திருப்பிச் செலுத்துமிடத்து அவற்றினைப் பதிவழிப்பதென அரசு தீர்மானித்ததன்மூலம் புதிய வேளாண்மைக் கடனுக்கான தகைமை வழங்கப்பட்டது.

குறைந்த வட்டிவீதங்களில் வேளாண்மைத் துறைக்கான சலுகைக் கொடுகடன் இரு அரச வங்களினூடாகவும், உள்நாட்டு வர்த்தக வங்கிகளினூடாகவும் தொடர்ந்து வழங்கப்பட்டது. மத்திய வங்கியினால் இனிமேல் இக்கடனுக்கான மீள்நிதியிடல் வழங்கப்படமாட்டாததோடு இதற்குப் பதிலாக அரசினால் வட்டி உதவிக்கொடுப்பனவு ஒன்று வழங்கப்பட்டது.

### 3.3. ஏற்றுமதிப் பயிர்கள்

#### தேயிலை

ஒரு காலத்தில் உலகில் மிக முக்கிய இடத்தினைக் கொண்டிருந்த இலங்கையின் தேயிலைக் கைத்தொழில் நீண்டகாலமாக, இடைக்கிடை நெருக்கடிகளை எதிர் நோக்கியுள்ளது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டவர்களுக்குச் சொந்தமான பெருந் தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்ட பின்னர் இப்பிரச்சினைகள் மோசமடைந்தன. பிரித்தானிய வாணிப நலன்கள் ஆபிரிக்கக் கண்டத்திலுள்ள கென்யா, மாலாவி, தான்சானியா ஆகிய நாடுகளுக்கு நகர்ந்தமையானது விசேடமாக கென்னியாவிலிருந்து கடுமையான போட்டியின் ஆரம்பமாக விளங்கியது. பிரபல்யமானதும் வசதியானதுமான பானமாக கோப்பி ஆரம்பித்தமையானது தேயிலை விலைகளை மந்தமடையச்செய்து இக்கைத்தொழிலின் பிரச்சினைகளை சிக்கலாக்கின, இரு பெரும் அரசுடைமைக் கூட்டுத்தாபனங்களான இஅபெகூ, மதோஅச என்பனவற்றின் கீழான தேசியமயமாக்கப்பட்ட பெருந்தோட்டங்களின் முகாமைத்துவம், உற்பத்தியை அதிகரித்தல் தொடர்ந்தும் போட்டியாக விளங்கல் ஆகிய புதிய சவால்களுக்கு இசைந்து செல்லும் கூடியபமுவிற்கு ஈடுகொடுக்க இயலாது இருந்தன. சமூக - அரசியல் காரணங்களுக்காக பெருந்தோட்டங்களின் முகாமைத்துவத்தில் அரசின் நேரடியான தலையீடு வர்த்தக நலன்களைவிட முன்னுரிமை பெற்றுள்ளது. அவர்களது முகாமைத்துவக் காலப்பகுதி, பெரும் நிதி இழப்புக்கள், வீண்விரயம், அதிகரிக்கும் செலவுகள், செயல்திறனில் ஏற்பட்ட வீழ்ச்சி ஆகிய பண்புகளைக் கொண்டிருந்தன.

இந்தியா, கென்யா போன்ற அதன் போட்டியாளர்களுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் நிலைமை நம்பிக்கையற்றதாகக் காணப்படுகின்றது. விளைச்சலும், தொழிலாளர் உற்பத்தித்திறனும் மிகக்குறைந்த அளவில் காணப்படுகின்றவேளையில் தேயிலையின் உற்பத்திச்செலவு மிகவும் அதிகரித்துக் காணப்படுகின்றது. அதிகரித்த கூலிகளுக்கு மத்தியிலும் இலங்கையில் ஒவ்வொரு தொழிலாளியினதும் உற்பத்தித்திறன் மிகத் தாழ்ந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. இலங்கையின் பெருந் தோட்டங்களில் கூலி அமைப்பு உற்பத்தித்திறனின் வளர்ச்சியுடன் சார்புடையதாக இல்லை. இக்கைத்தொழில் தொடர்ந்து இயங்குவதற்கு ஏற்றுமதித் தீர்வைகள் படிப்படியாக குறைக்கப்பட வேண்டியிருந்ததுடன் அதிகரித்துவரும் உற்பத்திச் செலவு மற்றும் வீழ்ச்சியுறும் விலைகள் என்பனவற்றிற்குத் தேவையான சீராக்கங்களின் தாக்கத்தைச் செலாவணிவீதம் ஓரளவில் பொறுத்துக்கொள்ளவேண்டியிருந்தது. பெருந்தோட்டங்களின் தொடர்ச்சியான இழப்புக்கள் அரசினால் பணிக்கப்பட்ட கொடுகடன்கள் மூலம் நிதியிடப்பட்டன.

இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு அரசு 1992 இல் ஓர் மீளமைப்புச் செயற்றிட்டத்தை ஆரம்பிக்கத் தீர்மானித்தது. தொடக்கத்தில் அரசுக்குச் சொந்தமான பெருந் தோட்டங்களில் பெரும்பாலானவைவற்றின் முகாமைத்துவம் ஐந்து ஆண்டு ஒப்பந்தத்தின்கீழ் தனியார் முகாமைக்கூட்டு நிலையங்களுக்கு கையளிக்கப்பட்டது. சொத்துடைமையில் குறிப்பிடத் தக்க பங்கு இல்லாமையாலும், குத்தகைகள் குறுகிய காலமாக இருந்ததாலும் முகாமைக் கூட்டுநிலையங் களுக்கு மூலதனச் செலவினத்தில் முதலீடு செய்வதற்கான ஊக்குவிப்புக்கள் எதுவும் காணப்படவில்லை.

எனவே, அரசு 1995 இல் குத்தைகைகளை புதுப்பிக்கும் விருப்பத்தேர்வுடன் அரசு பெருந்தோட்டங்களின் முகாமைத்துவத்தை 50 வருடக் காலப்பகுதிக்கு தனியார் மயப்படுத்துவதற்கு ஓர் துணிகரமான முடிவை மேற்கொண்டது.

1995 இல் தேயிலை உற்பத்தி, முன்னைய ஆண்டின் உச்ச உற்பத்தியை 2 சதவீதத்தினால் விஞ்சி 2,460 இலட்சம் கிலோக்கிறாம்களைப் பதிவுசெய்தது. இதற்கான முதன்மைக் காரணமாக சாதகமான வானிலை நிலைமைகள் விளங்குகையில், அரச பெருந்தோட்டங்களின் மேம்பாடடைந்த முகாமைத்துவம், சிறு உடைமையாளர் களிடமிருந்தான கூடிய உற்பத்தித்திறன் குறிப்பாக இவ்வாண்டின் இறுதிப்பகுதியில் நிலவிய கவர்ச்சிகரமான விலைகள் என்பனவும் இதற்குப் பங்களிப்புச் செய்தன. தாழ்நிலத் தேயிலையின் உற்பத்தி தொடர்ச்சியான மூன்றாவது ஆண்டிலும் 3 சதவீதத்தால் அதிகரித்து 1,220 இலட்சம் கி. கிறாம்களை எய்தியதுடன் இவ்வுற்பத்தி இதுவரை தாழ்நிலங்களில் பதிவு செய்யப்பட்ட மிக்ச்சிறந்த உற்பத்தியாகவும், மொத்தத் தேயிலை உற்பத்தியின் அதிகூடிய பங்காகவும் விளங்கியது. அதிகரித்த உற்பத்தியானது முக்கியமாகப் புதிய பயிர் நிலங்களில் நடப்பட்ட சிறந்த விளைவைக் கொடுக்கும் செடித்தொகுதிகளிலிருந்தான கூடிய விளச்சலின் காரணமாக ஏற்பட்டதாகும். மத்திய நிலங்களின் உற்பத்தி 7 சதவீதத்தால் அதிகரித்திருக் கையில் உயர்நிலத்தேயிலை உற்பத்தி 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

நன்கு நிறுவப்பட்ட அரசுக்குச் சொந்தமான பாரிய பெருந்தோட்டங்களைவிட சிறு உடைமை யாளர்கள் மிகவும் திறன்வாய்ந்த உற்பத்தியாளர்களாக விளங்குகின்றனர் என்பதைக் கவனத்திற் கொள்ளல் முக்கியமானதாகும். சிறு உடைமையாளர்கள் பயிர்செய்யப்பட்ட மொத்தநிலத்தில் 45 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் மொத்தக் கொழுந்து உற்பத்தியில் கிட்டத்தட்ட 60 சதவீதத்தை உற்பத்தி செய்கின்றனர். கிட்டத்தட்ட 65 சதவீதமான தேயிலைச்சிறு உடைமையாளர்கள் காலி, மாத்தறை, இரத்தினபுரி மாவட்டங்களிலுள்ள தாழ் நிலப்பகுதிகளிலேயே காணப்படுகின்றனர்.

அண்மைக்காலங்களிலிருந்து இலங்கை மரபுவழித்தேயிலை உற்பத்தியிலிருந்து, சந்தைகளில் விரைவாகப் பிரபல்யம் பெற்றுவருவதும் விரைந்து வடிக்கக்கூடியதுமான அனுகூலங்களைக் கொண்ட வெட்டிக்கிழித்துச்சுருட்டப்பட்ட (சிரிசி) முறைக்கு மாறுவதற்கானதோர் முயற்சியை மேற்கொண்டது. 1994இல் 41 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்த சிரிசி உற்பத்தி, 1995 இல் 200 இலட்சம் கி. கிறாம்களுக்கு மேலும் 77 சதவீதத்தால் விரிவடைந்தது. அதன்படி மொத்த உற்பத்தியில் சிரிசி தேயிலை 1994 இன் 5 சதவீதத்திற்கெதிராக 8 சதவீதத்திற்கு வகைகூறியது. புதிய சிரிசி தேயிலைத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டமை மற்றும் சில மரபுவழித் தொழிற்சாலைகள் சிரிசி செயல் முறைக்கு மாற்றப்பட்டமை என்பனவற்றின் விளைவாக சிரிசி தேயிலை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 25 இலிருந்து 1995 இல் 33 இற்கு அதிகரித்தது.

தயாரிக்கப்பட்ட தேயிலையின் உற்பத்திச் செலவானது அதிகரித்துவரும் கூலி மற்றும் வளமாக்கிச் செலவுகள் என்பனவற்றின் காரணமாக கி. கி.ஒன்றிற்கு ரூ. 79.14 இற்கு 5 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும் தொடர்ச்சியாக ஐந்தாவது ஆண்டிலும் கொழும்பு ஏலங்களில் பெறப்பட்ட தேயிலையின் சராசரி விலை தேயிலை உற்பத்திச் செலவைவிடக் குறைவாக விளங்கியது. நீண்டகாலமாக தொழிற்சாலை சொந்தக்காரர்களில் பலர் எதிர்க்கணிய இலாபப்பங்கை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டதால் இக்கைத்தொழில் முழுமையாகவே பாரிய திரவத்தன்மை பிரச்சனையை எதிர்கொண்டது. பல தனியார் தொழிற்சாலைத் சொந்தக்காரர்களும், பல முகாமைத்துவக் கூட்டுநிலையங்களும் வங்கிகளி லிருந்து பெருமளவு கடன்பெற்றதன் மூலம் தொடர்ந்து செயற்படக்கூடியதாக இருந்தன.

எனினும், கொழும்பு ஏலங்களில் தேயிலையின் சராசரி விலை 1995 இன் பின்னரைப்பகுதியில் மீட்சியடைந்தது. அதிகரித்த உள்நாட்டு நுகர்வு காரணமாக இந்தியாவின் ஏற்றுமதி மிகையில் ஏற்பட்ட குறைப்பு, கொழும்பு ஏலங்களில் சுதந்திர நாடுகளின் பொதுநலவாயத்தினதும் (முன்னைய சோவியத் ஒன்றியம்) குறிப்பிட்ட மத்திய கிழக்கு நாடுகளினதும்

அட்டவணை 3.2

**தேயிலைத் துறை மீதான புள்ளி விபரங்கள் 1993 – 1995**

| விடயம் | அலகு | 1993 | 1994 (அ) | 1995 (ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி | ப.இ.கி. கிறாம்கள் | 232 | 242 | 246 |
| 1.1 உயர்நிலம் | " | 73 | 77 | 74 |
| 1.2 மத்திய நிலம் | " | 47 | 47 | 51 |
| 1.3 தாழ் நிலம் | " | 112 | 118 | 122 |
| 2. தேயிலை பயிரிடப்பட்ட பரப்பு | '000 எக்டேயர்கள் | வி.கி. | 187 | 187 |
| 3. வளமாக்கிப் பாவனை | '000 மெ.தொன்கள் | 147 | 126 | 120 |
| 4. மீளப்பயிரிடல் | எக்டேயர்கள் | 1,311 | 1,225 | 1,274 |
| 5. விலைகள் | | | | |
| 5.1 கொழும்பு (தேறிய) | ரூபா/கி.கி. | 68.88 | 65.12 | 72.21 |
| 5.2 ஏற்றுமதி (க. ஏ. பெ.) | .. | 91.16 | 91.32 | 102.31 |
| 6. உற்பத்திச் செலவு | .. | 75.81 | 75.67 | 79.14 |
| 7. ஏற்றுமதிகள் | ப. இ. கி. கி. | 218 | 230 | 241 |
| 8. ஏற்றுமதி வருவாய்கள் | ரூ. ப. இ. | 19,911 | 20,964 | 24,638 |
| | (சிஎஉ. ப. இ.) | 296 | 296 | 316 |
| 9. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (இ) | | 2.4 | 2.3 | 2.1 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை.
(இ) தேயிலை ஆணையாளர் பிரிவினால் 1992 இல் மேற்கொள்ளப்பட்ட அளவையின் அடிப்படையில் அமைந்தவை. (கைவிடப்பட்ட தேயிலை நிதியங்கள் உள்ளடக்காது.
(ஈ) பயிரிடலும் பதனிடலும் மட்டும்.


மூலங்கள் : இலங்கைத் தேயிலைச் சபை, தேசிய வளமாக்கிச் செயலகம், இலங்கை மத்திய வங்கி.

சுறுசுறுப்பான பங்கேற்பு என்பன இதற்கான காரணங்களாகும். ஐ. அ. டொலருக்கெதிராக இலங்கை ரூபாவின் பெயரளவிலான பெறுமானத் தேய்வும் தேயிலையினை போட்டித்தன்மையுடைய தாக்கியது. 1995 இல் தேயிலையின் ஆண்டுச் சராசரி விலை கி. கிறாம் ஒன்றிற்கு ரூ. 72.21 இற்கு 11 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் சராசரி ஏற்றுமதி விலையும் 1995 இல் 12 சதவீதத்தால் ரூ. 102.31 இற்கு அதிகரித்தது.

1995 இல் தேயிலைத்துறையில், வளமாக்கிப் பயன்பாடு நிதி நெருக்கடிகள் காரணமாக 5 சதவீதத்தால் 120,300 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. தேயிலைக்கான வளமாக்கி பயன்பாடடில் ஏற்பட்ட வீழ்ச்சியானது தேயிலைப் பயிர்ச் செய்கையானர்களினால் எதிர்கொள்ளப்பட்ட நிதி இடர்ப்பாடுகளின் காரணமாக ஏற்பட்டதோடு ஏற்கனவே அவர்களது போட்டியாளர்களைவிடக் குறைவான உற்பத்தித் திறனை கொண்டுள்ள இத்துறையினரின் மீது நீண்டகால பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடியதொன்றாகும்.

முன்னைய ஆண்டைப் போலவே, மூன்று உயர வகைகளிலும் புதிய பயிரிடலுக்கான உதவிக்கொடுப்பனவு வீதம் எக்டேயர் ஒன்றிற்கு ரூ.

வரைபடம் 3.1
விலையும், உற்பத்திச் செலவுச் சுட்டெண்களும் : தேயிலை
(1990 = 100)




36,000 ஆக மாற்றமின்றியிருந்தது. மீளப்பயிரிடலுக்கான உதவிக்கொடுப்பனவு வீதமும் தாழ்நிலப் பிரதேசத்தில் எக்டேயரொன்றிற்கு ரூ. 57,000 ஆகவும் உயர் மற்றும் மத்திய நில வகைகளில் எக்டேயரொன்றிற்கு ரூ. 67,000 ஆகவும் மாற்றமின்றியிருந்தது. மீள்நடுகை உதவிக்கொடுப்பனவு மொத்த மீள்நடுகைச் செலவில் 25 சதவீதத்தை மட்டுமே உள்ளடக்குகிறது. 1995 இல் தேயிலை சிறு உடைமைகள் அபிவிருத்தி மேலாண்மைச் சபையினால் பகிர்ந்தளிக்கப்பட்ட மீளப்பயிரிடலுக்கான மொத்த உதவிக்கொடுப்பனவுகள் ரூ. 760 இலட்சமாக விளங்கியதுடன் இது 1994 இன் மட்டத்தைவிடச் சிறிதளவு கூடியதாகும்.

பயிரிடலுக்கான உதவிக்கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக, அரசு தொடர்ந்தும் தேயிலைத் தொழிற்சாலையை நவீனமயப்படுத்தலுக்கும் உதவியது. தேயிலைத் தொழிற்சாலை அபிவிருத்தி ஊக்குவிப்புத் திட்டமும், சிரிசி பொறிகளுக்கான ஊக்குவிப்புத் திட்டமும் 1995 இலும் தொடர்ந்தது. பெறுமதி கூட்டப்பட்ட தேயிலையின் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக தேயிலை உறையிடும் பொறிகளின் கொள்வனவுகள் மீதான வட்டி உதவிக்கொடுப்பனவு 50 சதவீதத்திலிருந்து 75 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. இந்த உதவிக்கொடுப்பனவுகள் கைத்தொழில் மீது விசேட தீர்வைகள் விதிப்பதன் மூலம் நிதியிடப்பட்டது. 1995 இலும் தேயிலைத் தீர்வை கி. கிறாமிற்கு ரூ. 2.00 ஆக மாற்றமின்றியிருந்ததுடன் பெறப்பட்ட வருவாய் ரூ. 4,770 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 2 சதவீதம் அதிகரித்துக்காணப்பட்டது.

## இறப்பர்

1995 இல் இயற்கை இறப்பரின் விலைகள் உயர்ந்த மட்டங்களை எய்தியதன் காரணமாக உள்நாட்டு இறப்பர்க் கைத்தொழில் செழிப்பான வளர்ச்சியைக் கண்டது. எனினும் இறப்பர் உற்பத்தி தொடர்ந்தும், தாழ்ந்த மட்டத்தில் காணப்பட்டதால் இதன்மூலம் நாடு ஓரளவு நன்மையை மட்டுமே அடையக்கூடியதாக இருந்தது. இதேவேளை தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக கூலிகள் அதிகரித்ததைத் தொடர்ந்து செலவுகள் அதிகரித்துச் செல்லும் போக்கைக் கொண்டிருந்தன.

இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் மதிப்பீடுகளின்படி இறப்பர் விலைகள் அதிகூடிய மட்டங்களை எய்தியதுடன் 1995 இல் இறப்பர் உற்பத்தி இறப்பர் விலைகள் அதி உயர்ந்த மட்டங்களை அடைந்தபோதிலும் 1,057 இலட்சம் கிலோக்கிராம்களாக விளங்கி 0.4 சதவீத சிறிய அதிகரிப்பை மட்டுமே காட்டியது. மொத்த வெளியீட்டின் அதிகூடிய பங்கிற்கு வகைகூறும் தட்டை இறப்பரின் உற்பத்தி 3 சதவீதத்தால் 420 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு அதிகரித்தது. தொழில்நுட்ப ரீதியில் பாகுபடுத்தப்பட்ட இறப்பரின் உற்பத்தி இருமடங்கிற்கும் மேலாக 230 இலட்சம் கி. கிறாம்களுக்கு அதிகரித்தது. மாறாக 1995 இல் கிறேப் இறப்பரின் உற்பத்தி 9 சதவீதத்தால் 350 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

1995 இல் பால் எடுத்தலின் கீழான நிலப்பரப்பு 123,900 எக்டேயர்களுக்கு 2 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் எக்டேயருக்கான விளைச்சல் 853 கிலோக்கிறாம்களுக்கும் 2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. குறைந்த வளமாக்கிப் பிரயோகமும் பெரும்பாலான இறப்பர் பெருந்தோட்டங்கள் முதிர்ச்சியடைந்தும் குறைந்த விளைச்சலைத்தரும் செடித்தொகுதிகளைக்கொண்டும் காணப்பட்டமையும் பெருமளவு பால் எடுக்கும் காலத்தில் மழையின் குறுக்கீடும் அனுபவம் மிக்க பால் எடுப்பவர்களின் பற்றாக்குறையும் விளைச்சலின் வீழ்ச்சிக்கும் உற்பத்தி அதிகரிப்பின்மைக்கும் காரணங்களாகும்.

இறப்பர்துறையானது பெரும்பாலும் சிறு உடைமையாளர் செல்வாக்கில் இருந்ததுடன் பாலெடுக்கும் நிலப்பரப்பின் 64 சதவீதத்தினை தனியார்துறையினைச் சேர்ந்த சிறு உடைமையாளர்கள் கொண்டிருந்தனர். மேம்பாடடைந்த விலைகள் முதிர்ந்த இறப்பர் மரங்களை மாற்றீடு செய்வதற்கு சில ஊக்குவிப்புக்களை வழங்கின. இவ்வாண்டில் கிட்டத்தட்ட 2,100 எக்டேயர்கள் மீள்நடுகை செய்யப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டைவிட 29 சதவீத அதிகரிப்பாகும். எனினும் 1995 இல் புதிதாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 17 சதவீதத்தால் 553 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது. புதிய பயிரிடல் பொருட்களுக்கான பற்றாக்குறை ஒன்று தெளிவாகக் காணப்பட்டது. மீள்நடுகைக்கான உதவிக் கொடுப்பனவுகள் எக்டேயருக்கு ரூ. 37,065 இலிருந்து ரூ. 49,722 இற்கும், புதிய பயிரிடலுக்கான உதவுதொகை எக்டேயருக்கு ரூ. 35,830 இலிருந்து ரூ. 48,185 இற்கும் அதிகரிக்கப்பட்டன. அதிகரித்த இக்கொடுப்பனவுகளின் நன்மை பெறுவோர்களாக அநேகமாக சிறு உடைமையாளர்கள் விளங்கினர். 1988 இல் உலக வங்கியியால் நிதியிடப்பட்ட சிறு உடைமையாளர் இறப்பர் புத்தாக்கச் செயற்றிட்டத்தின் செயலாற்றம் ஏமாற்றம் தருவதாக அமைந்துள்ளது. 1995 இல் மீள்நடுகை இலக்கு 3,430 எக்டேயர்களாக விளங்கியபோதிலும் (களுத்துறை, கேகாலை, இரத்தனிபுரி மாவட்டங்களில்) மீள்நடுகை செய்யப்பட்ட பரப்பின் உண்மையான அளவு 1,329 எக்டேயர்கள் மட்டுமேயாகும். இச்செயற்றிட்டம் 1996 யூலை அளவில் 30,000 எக்டேயரில் மீள்நடுகை செய்வதற்கும் 8,750 எக்டேயரில் புதிதாகப் பயிர்செய்வதற்கும் எதிர்பார்த்தது. ஆனால் இச்செயற்றிட்டம் கடந்த ஏழு ஆண்டுகளில் 50 சதவீத பயனை மட்டுமே எய்தக்கூடியதாக இருந்தது. பெரும்பாலான காலங்களில் இறப்பர் விலைகள் கவர்ச்சியற்றதாகக் காணப்பட்டமையினால் தனியார் நாற்றுமேடைகளில் விதை இருப்புக்களை அதிகரிப்பதற்கான சிறிதளவு ஊக்குவிப்புக்களே காணப்பட்டன. மேலதிகமாக பருவகாலங்களில் பெய்த அளவுக்கதிகமான மழை கிடைக்கக்கூடியதாக இருந்த விதைகளின் தாங்கிருப்பையும் குறைத்துவிட்டது.

## அட்டவணை 3.3

### இறப்பர்த்துறை மீதான புள்ளி விபரங்கள் 1993 - 1995

| விடயம் | அலகு | 1993 | 1994 (அ) | 1995 (ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி | ப. இ. கி. கி. | 104 | 105 | 106 |
| 2. பரப்பளவு (இ) | | | | |
| 2.1 பயிர்ச் செய்கைக்குட்பட்ட | '000 எக்டேயர்கள் | 162 | 161 | 162 |
| 2.2 பால் எடுக்கும் | ” | 119 | 121 | 124 |
| 3. விளைச்சல் | கி. கி. / எக்டேயர் | 873 | 870 | 853 |
| 4. வளமாக்கிப் பாவனை | '000 மெ. தொன்கள் | 18 | 17 | 15 |
| 5. மீள் நடுகை | எக்டேயர்கள் | 2,419 | 1,623 | 2,100 |
| 6. விலைகள் | | | | |
| 6.1 கொழும்பு (ஆர். எஸ். எஸ். 1) | ரூ. / கி. கி. | 35.48 | 50.36 | 72.04 |
| 6.2 ஏற்றுமதிகள் (க. ஏ. பெ.) | ” | 44.34 | 51.81 | 83.69 |
| 7. உற்பத்திச் செலவு (ஈ) | ” | 23.00 | 24.90 | 26.50 |
| 8. ஏற்றுமதிகள் | ப. இ. கி. கி. | 70 | 69 | 68 |
| 9. உள்நாட்டு நுகர்வு | ” | 33 | 36 | 37 |
| 10. ஏற்றுமதி வருவாய்கள் | ரூ. ப. இ. | 3,086 | 3,582 | 5,713 |
| | (சிஎஉ. ப. இ.) | 46 | 51 | 74 |
| 11. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 0.7 | 0.9 | 0.8 |


(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) 1993 இல் குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேளாண்மைப் பயிர்கள் மற்றும் விலங்கு வளர்ப்பு மீதான அளவையின் அடிப்படையில் அமைந்தது.
(ஈ) சிறு உடைமையாளர்கள் மட்டும்.
(உ) பயிரிடலும், பதனிடலும் மட்டும்.

மூலங்கள் : இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம், தேசிய வளமாக்கிச் செயலகம், இலங்கை மத்திய வங்கி.

இறப்பரின் சராசரி உற்பத்திச் செலவு, பாரிய பெருந்தோட்டங்களில் கி. கிராமிற்கு ரூ. 50,56 இற்கு 32 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும் சிறு உடைமையாளர் துறையில் 1995 இல் இவ்வதிகரிப்பு கி. கிறாமிற்கு ரூ. 26.50 இற்கு 6 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்தது. உற்பத்திச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு விசேடமாக பால் எடுக்கும் தொழிலாளர்களின் பற்றாக்குறையால் ஏற்படும் கூலிகளின் அதிகரிப்பு, உள்ளீடுகளின் அதிகரித்த செலவு, வளமாக்கியின் அதிகரித்த செலவு என்பனவற்றால் ஏற்பட்டதாகும். சிறு உடைமையாளர்களின் சராசரிச் செலவு பாரிய தோட்டங்களின் செலவைவிட அரைப்பங்காக இருப்பது குறிப்பிடத்தக்க விடயமொன்றாகும்.

1995 இல் இறப்பர் விலைகளில் திடீர் அதிகரிப்பொன்று காணப்பட்டது. கொழும்பு ஏலங்களில் ஆர். எஸ். எஸ். 1இன் ஆண்டுச் சராசரிவிலை கி. கி. ஒன்றுக்கு ரூ. 72.04 இற்கு 43 சதவீதத்தால் அதிகரித்தது. இறப்பரின் எல்லாத் தரங்களினதும் சராசரி ஏற்றுமதிவிலை (க. ஏ. பெ.) கி. கி ஒன்றுக்கு ரூ. 83.69 இனை எய்தியதுடன் 62 சதவீத அதிகரிப்பைக்காட்டியது. இதன்படி 1995 இல் ஏற்றுமதி அளவு 680 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்த போதிலும் 1995 இல் ஏற்றுமதி வருவாய்கள் ரூ. 57,130 இலட்சங்களுக்கு 59 சதவீதத்திற்கும் மேலாக அதிகரித்தது.

ரயர் கைத்தொழிலிலிருந்தான அதிகரித்த கேள்வியினாலும், செயற்கை இறப்பர் கைத்தொழிலில் காணப்பட்ட இயலளவுக் கட்டுப்பாடுகளினாலும் 1995 இல் விசேடமாக முதல் 9 மாதங்களில் பன்னாட்டுச் சந்தையில் இயற்கை இறப்பருக்கான கேள்வி பெருமளவில் அதிகரித்தது. மலேசியாவின் இறப்பர் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியொன்று உயர்ந்த விலைகளைப் பேணுவதற்கு மேலும் உதவியது. உள்நாட்டில் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்புத்துறையில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க மேம்பாடு காரணமாக இறப்பரின் உள்நாட்டு நுகர்வும் தொடர்ச்சியாக பதினோராவது ஆண்டிலும் உறுதியாக அதிகரிப்பைக் காட்டியது. 1995 இல் உள்நாட்டு நுகர்வு 370 இலட்சம் கி. கிறாம்களுக்கு 3 சதவீதத்தால் அதிகரித்ததுடன், இது உள்நாட்டு உற்பத்தியின் மூன்றிலொரு பாகமாக விளங்கியது. அண்மைய எதிர்காலத்தில் இயற்கை இறப்பருக்கான கேள்வி அநேகமாக தொடர்ந்தும்




வரைபடம் 3.2
விலையும் உற்பத்திச் செலவுச் சுட்டெண்களும் : இறப்பர்
(1990 = 100)

அதிகரித்துக்காணப்படலாம். முதிர்ச்சியடைந்த மரங்களுக்கு பசளையிடுவதற்கும், பாலெடுத்தலை வசதியாக்குவதற்கான மழைத்தடுப்புக்களைப் பொருத்துவதற்கும் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் 1995 இல் ஊக்குவிப்புத்திட்டமொன்றை அறிமுகப்படுத்தியது.

இறப்பர் மீள்நடுகை நிதியத்தை குறைநிரப்புச் செய்வதற்காக 1995 பெப்புருவரி 1 இலிருந்து தட்டை மற்றும் கிறேப் இறப்பர் மீதான இறப்பர் மீள் நடுகைத் தீர்வை கி. கி. ஒன்றிற்கு ரூ. 1.15 இலிருந்து ரூ. 3.85 இற்கு அதிகரிக்கப்பட்டது. 1995 யூலை 1 இலிருந்து இத்தீர்வை ஏற்றுமதி செய்யப்பட்ட ஏனைய வகைகளுக்கும் விரிவாக்கப்பட்டது. இத்தீர்வையிலிருந்தான சேகரிப்பு மீள் நடுகைக்கான உதவிக்கொடுப்பனவின் வடிவில் இத்துறைக்கு மீண்டும் உள்ளீடு செய்யப்பட்டது.

## தெங்கு

1995 இல் தெங்கு உற்பத்தி முன்னைய ஆண்டின் மட்டத்தை 5 சதவீதத்தால் விஞ்சியுள்ளதாக மதிப்பிடப்பட்டதுடன் 27,550 இலட்சம் காய்களின் உற்பத்தியைப் பதிவு செய்தது. இது 1986 இலிருந்து பதிவுசெய்யப்பட்ட அதிகூடிய அளவாகும். உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு, முன்னைய இரு ஆண்டுகளிலும் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகளின் காலங்கடந்த தாக்கம் அதிகரித்த வளமாக்கிப் பிரயோகம் என்பனவற்றின் காரணமாக ஏற்பட்டதாகும். எதிர்பார்த்ததுபோலவே அன்றாட உணவின் முக்கிய பங்கினை வகிக்கும் தேங்காயின் உள்நாட்டு விலைகள் மிதமாக வீழ்ச்சியடைந்தன. தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளுக்கான உலகவிலைகள் உற்பத்தியின் நிச்சயமற்ற தன்மை காரணமாக அதிகரித்துக் காணப்பட்டது. இதன் விளைவாக தெங்கு உள்ளீட்டுப் பொருட்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ரூ. 35,210 இலட்சத்திற்கு 42 சதவீதத்தால் அதிகரித்தன. (சிஎஉ நியதிகளில் 29 சதவீதம்)

பொதுவாக, வழங்கலின் அதிகரிப்பின் காரணமாக உடன்தேங்காய்களின் விலைகள் வீழ்ச்சியுறும் போக்கைக் கொண்டிருக்கின்ற வேளைகளில் உள்ளீட்டு உற்பத்திகளை விட உலர்த்திய தேங்காய்த் துருவலின் இலாப விளிம்பு அதிகரித்துக் காணப்படுவதால் அதிகமான காய்கள் உலர்த்திய தேங்காய்த்துருவலின் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. 1995 இல் உலர்த்திய தேங்காய்த்துருவல், உலர்த்திய தேங்காய், தேங்காயெண்ணெய் என்பனவற்றின் பன்னாட்டு விலைகளும் அதிகரித்தன. இதன்படி, உலர்த்திய தேங்காய்த்துருவலின் உற்பத்திக்குச் சமமான காய்களின் எண்ணிக்கை 22 சதவீதத்தால் 4,650 இலட்சம் காய்களுக்கு அதிகரித்தது. 1986 இற்குப்பின்னர் இதுமிக உயர்ந்ததொரு உற்பத்தியாக இருந்தது. எண்ணெய் உற்பத்திக்குச் சமனான காய்கள் 5,400 இலட்சம் காய்களுக்கு 12 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் உலர்த்திய தேங்காய் ஏற்றுமதிகளுக்குச் சமமான காய்களின் எண்ணிக்கை 52 சதவீதத்தால் 490 இலட்சம் காய்களுக்கு அதிகரித்தது. 1995 இல் உடன்காய் ஏற்றுமதிகள் முன்னைய ஆண்டின் எண்ணிக்கையான 250 இலட்சம் காய்களாகவே விளங்கியது. உள்நாட்டுத் தெங்கு நுகர்வு 16,920 இலட்சம் காய்களுக்கு சிறிதளவால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளதுடன் இது தேசிய உற்பத்தியின் 61 சதவீதத்திற்கு வகைகூறியது.

1995 இல் தெங்கு பயிர்செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு கிட்டத்தட்ட 413,000 எக்டேயர்கள் என தெங்குப் பயிர்ச் செய்கைச் சபையால் (தெபச) மதிப்பிடப்பட்டுள்ளதோடு இதில் 1,235 எக்டேயர்கள் புதிதாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்புக்களாகும். மொனராகலை மாவட்டத்தின் சில புதிய பிரேதசங்கள் தென்மாகாணம், மகாவலி 'சி' பிரேதசம் ஆகியன தெங்குப்பயிர்ச் செய்கையின் கீழ் கொண்டுவரப்பட்டன. இதே வேளையில் வதிவிட கட்டிட அமைப்புக்களுக்காக தெங்கு நிலங்கள் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக நகர்ப்புறங்களுக்கு அண்மையாக பயிர்செய்யப்படும் நிலப்பரப்பில் குறைப்பு ஏற்பட்டது. 1995 இல் எக்டேயர்கருக்கான சராசரி விளைச்சல் 1994 இன் எக்டேயருக்கான 6,368 காய்களுடன் ஒப்பிடுகையில் 6,671 காய்களாக விளங்கி 5 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. 1995 இல் வளமாக்கிப் பாவனை 8 சதவீதத்தால் அதிகரித்தமை இதற்கான ஓரளவு காரணமாக விளங்கியது.

## அட்டவணை 3.4

### தெங்குத்துறை மீதான புள்ளி விபரங்கள் 1993 – 1995

| விடயம் | அலகு | 1993 | 1994 (அ) | 1995 (ஆ) |
|---|---|---|---|---|
| 1 உற்பத்தி (இ) | ப. இ. காய்களில் | 2,164 | 2,622 | 2,755 |
| 1.1 தேங்காய்த் துருவல் | ப. இ. காய்களில் (ஈ) | 269 | 380 | 465 |
| 1.2 தேங்காய் எண்ணெய் | ப. இ. காய்களில் (ஈ) | 176 | 480 | 540 |
| 1.3 உலர்த்திய தேங்காய் (உ) | ப. இ. காய்களில் (ஈ) | 24 | 32 | 49 |
| 1.4 உடன்காய் ஏற்றுமதிகள் | ப. இ. காய்களில் | 22 | 25 | 25 |
| 1.5 உள்நாட்டுத் தேங்காய் நுகர்வு (ஊ) | ப. இ. காய்களில் | 1,668 | 1,687 | 1,693 |
| 2. மொத்த நிலப்பரப்பு | 000 எக்டேயர்கள் | 411 | 412 | 413 |
| 3. சராசரி ஏற்றுமதி விலை (க. ஏ. பெ.) (எ) | காய்க்கு ரூபா | 6.31 | 5.67 | 6.08 |
| 4. வளமாக்கிப் பாவனை | '000 மெ. தொ. | 35 | 31 | 34 |
| 5. உற்பத்திச் செலவு | காய்க்கு ரூபா | 2.03 | 1.84 | 1.97 |
| 6. மீள் பயிரிடல் / கீழ் பயிரிடல் (ஏ) | எக்டேயர்கள் | 1,553 | 842 | 917 |
| 7. புதிய பயிரிடல் (ஏ) | எக்டேயர்கள் | 452 | 657 | 1,235 |
| 8 ஏற்றுமதி வருவாய்கள் | ப. இ. ரூபா | 2,796 | 3,761 | 5,271 |
| | (சிஎஉ. ப. இ.) | (41) | (53) | (68) |
| 8.1 உள்ளீட்டு உற்பத்திகள் (எ) | ப. இ. ரூபா) | 1,847 | 2,476 | 3,521 |
| 8.2 ஏனைய உற்பத்திகள் | (சிஎஉ. ப. இ) | (27) | (35) | (45) |
| | ப. இ. ரூபா | 949 | 1,285 | 1,750 |
| | (சிஎஉ. ப. இ.) | (14) | (18) | (23) |
| 9. மொ. உ. உற்பத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (ஐ) | | 2.6 | 2.4 | 2.1 |

மூலங்கள் : தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை.
தெங்கு அபிவிருத்தி மேலாண்மைச் சபை.
தேசிய வளமாக்கிச் செயலகம்.
இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) மதிப்பீடு (உலர்த்திய தேங்காயின் இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு சீராக்கஞ் செய்யப்படுவதன் காரணமாக பகுப்பாய்வின் கூட்டுத்தொகை மொத்தத்துடன் ஒத்திருக்கமாட்டாது.)
(ஈ) தேங்காய்க்குச் சமமான
1 மெற். தொன் தேங்காய்த் துருவல் = 6,800 காய்கள்.
1 மெற். தொன் எண்ணெய் = 8,000 காய்கள்.
1 மெற். தொன் உலர்த்திய தேங்காய் = 4,925 காய்கள்.
(உ) ஏற்றுமதிகள் மட்டும்.
(ஊ) தலைக்குரிய வீட்டு நுகர்வு ஆண்டுக்கு 94.8 காய்கள் என மதிப்பிடப்பட்டது.கைத்தொழிலுக்கு பயன்படுத்தப்பட்டவை தவிர.
(எ) மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மட்டும்.
(ஏ) விபரமான தரவுகள் கிடைக்காமை காரணமாக 0.4 எக்டேயர்களுக்கும் குறைவான உடைமைகளில் மேற்கொள்ளப்பட்ட பயிரிடல் நடவடிக்கைகளை இது உள்ளடக்கவில்லை.
(ஐ) உற்பத்தி செய்தலும் பதனிடலும் மட்டும்.

1995 இல் தெங்குப் பயிரிடலுக்கான உதவிக்கொடுப்பனவுகள் மீள்பயிரிடலுக்கும் (முழுமையாகப் பிடுங்குதல்) எக்டேயருக்கு ரூ. 25,000 ஆக விளங்கியது. இக்கொடுப்பனவுகள் ஒழுங்கற்ற மீள்நடுகைக்காக எக்டேயருக்கு ரூ. 12,500 ஆகவும், ஈரத்தன்மையைப் பேணுவதற்கு எக்டேயருக்கு ரூ. 7,500 ஆகவும், இடைப்பயிர் செய்கைக்கு எக்டேயருக்கு ரூ. 10,000 ஆகவும் மாற்றமின்றியிருந்தன. 1995 இல் மீளப்பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 9 சதவீதத்தால் 917 எக்டேயர்களுக்கும், புதிதாக பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 88 சதவீதத்தால் 1,235 எக்டேயருக்கும், ஈரத்தன்மையை பேணுவதற்கான பரப்பளவு 14 சதவீதத்தால் 1,212 எக்டேயர்களுக்கும், இடைப்பயிர் செய்யப்பட்ட பரப்பளவு 41 சதவீதத்தால் 1,188 எக்டேயர்களுக்கும் அதிகரித்தன.

1995 இல் அதிகரித்த வழங்கல் நிலைமையானது கொழும்பு ஏலங்களில் உடன்காய்களின் சராசரி மொத்தவிற்பனை விலையை காயொன்றிற்கு ரூ. 3.52 இற்கு 4 சதவீதத்தால் குறைவடையச் செய்தது. எனினும் 1995 இல் மூன்று முக்கிய உள்ளீட்டுப்பொருட்களினதும் சராசரி ஏற்றுமதிவிலை காயொன்றிற்கு ரூ. 6.08 இற்கு 7 சதவீதத்தால் அதிகரித்தது. பிலிப்பைன் நாட்டிலிருந்தான தெங்குப்பொருட்களின் வழங்கல் குறைவடைந்தமையின் காரணமாக மூன்று உள்ளீட்டு

உற்பத்திகளுக்குமான விசேடமாக உலர்த்திய தேங்காய் மற்றும் தேங்காயெண்ணெய் என்பனவற்றுக்கான உலகளாவிய கேள்வி அதிகரித்தமையே இதற்கான காரணமாக அமைந்தது.


இதன்படி, 1995 இல் உள்ளீட்டு உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் சிஎஉ நியதிகளில் 29 சதவீதத்தால் அதிகரித்தன. தேங்காய்ப்பால் மா போன்ற ஏனைய தெங்கு உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களும் 28 சதவீதத்தால் அதிகரித்தன.

இதே வேளையில், கூலி அதிகரிப்புக்களின் காரணமாகவும் வளமாக்கி விலைகளின் அதிகரிப்புக் காரணமாகவும் 1995 இல் சராசரி உற்பத்திச் செலவு 7 சதவீதத்தினால் காயொன்றிற்கு ரூ. 1.97 இற்கு அதிகரித்தது.

1993 இல் தெங்கு அபிவிருத்தி மேலாண்மைச் சபையால் அறிமுகப்படுத்தப்பட்ட தேங்காய்த் துருவல் ஆலைகளுக்கான தொடர்ச்சியாக உலர்த்தும் முறைகளின் அமைப்புக்கான நிதி உதவித் திட்டம் 1995 இலும் தொடர்ந்தது. இத்திட்டத்தை 1997 திசெம்பர் 31 வரை தொடர்வதற்காக அமைச்சரவையின் ஒப்புதல் பெறப்பட்டது. தேங்காய்த்துருவல் ஆலைகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஆலையொன்றிற்கு ரூ. 30 இலட்சத்திற்கு மேற்படாது பொறிச் செலவின் 40 சதவீதத்தை தேங்காய்த்துருவல் ஆலையாளருக்கு உதவிக் கொடுப்பனவாகச் செலுத்தப்பட்டது. 1995 இல் இச்செயற்றிட்டத்தின்கீழ் ரூ. 70 இலட்சம் 15 ஆலையாளர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டது.

1995 இல் தெங்குப் பயிர்ச் செய்கையாளர் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டதுடன்

வரைபடம் 3.3
விலையும் உற்பத்திச் செலவுச் சுட்டெண்களும் : தெங்கு
(1990 = 100)




ஆண்டின் இறுதியில் அத்தகைய 25 சங்கங்கள் அமைக்கப்பட்டன. தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை (தெபச) சிறு உடைமையாளர்களிடையே வளமாக்கியின் பாவனையை பிரபல்யப்படுத்துவதற்காக புதிய 5 கி. கி. தெங்கு வளமாக்கி உறையொன்றினை அறிமுகப்படுத்தியது.

உயர்ந்த தரத்திலான விதைகளின் பாவனையை ஊக்குவிக்கும் பொருட்டு வேளாண்மைத் திணைக்களத்தின் உதவியுடன் விதைச் சான்றிதழ் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. தெங்குப் பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்காக விசேடமான தெங்கு முக்கோணப் பிரதேசத்திற்கு வெளியில் தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து தெங்குப் பயிர்ச்செய்கை சபை தென்மாகாணத்தில் துணை ஆராய்ச்சி நிலையமொன்றையும் நாற்று மேடையொன்றையும் அமைப்பதற்கு திட்டமிட்டது.

பயன்தரு விரிவாக்கப் பணிகள், நல்லதரமான விதைகளின் வழங்கல் என்பனமூலம், தெங்கு நிலங்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு ஐந்து ஆண்டு தெங்கு அபிவிருத்தித் திட்டம் (1995 - 1999) ஒன்று தெங்குப் பயிர்ச் செய்கைச் சபையால் ஆரம்பிக்கப்பட்டது.

### ஏனைய ஏற்றுமதிப் பயிர்கள்

ஏனைய ஏற்றுமதிப்பயிர்களின் உற்பத்திச் செயலாற்றம் கலப்பானதாக இருந்தது. கறுவா, புல்லெண்ணெய், சாதிக்காய் சாதிப்பத்திரி ஆகிய அதிகரிப்புக்களைப் பதிவுசெய்திருக்கையில் கோப்பி, மிளகு, கராம்பு என்பன வீழ்ச்சியைப் பதிவு செய்தன. இவ்வாண்டில் கறுவாச்சுருளின் உற்பத்தி 1994 இல் உற்பத்தி செய்யப்பட்ட 9,774 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் 13 சதவீதத்தினால் 11,056 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. கறுவா உற்பத்தியின் குறிப்பிடத்தக்க மேம்பாட்டிற்கு கவர்ச்சிகரமான விலைகளின் காரணமாக வேளாண்மையாளர்களினால் சிறந்த பேணல் நடைமுறைகள் பின்பற்றப்பட்டமை காரணமாக விளங்கியது. இத்துடன் மீளப்பயிரிடப்பட்டதும் புத்தாக்கம் செய்யப்பட்டதுமான நிலப்பரப்புக்களின் அறுவடையும் அதிகரித்த உற்பத்திக்குப் பங்களிப்புச் செய்தன. புல்லெண்ணெய், சாதிக்காய் சாதிப்பத்திரி என்பனவற்றின் உற்பத்தி முறையே 20 சதவீதத்தாலும் 5 சதவீதத்தாலும் அதிகரித்தது.

1995 இல் கோப்பி உற்பத்தி 51 சதவீதத்தால் 1,800 மெற்றிக் தொன்களுக்கு குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தது. கோப்பியின் உற்பத்தியில் ஏற்பட்ட

## அட்டவணை 3.5

## ஏனைய ஏற்றுமதிப்பயிர்களின் உற்பத்தி 1993 – 1995

(மெற்றிக் தொன்கள்)

| பயிர் | 1993 | 1994 | 1995 (அ) | சதவீத மாற்றம் 1994 | சதவீத மாற்றம் 1995 |
|---|---|---|---|---|---|
| கோப்பி | 2,012 | 3,687 | 1,800 | 83 | -51 |
| கொக்கோ | 1,051 | 1,463 | 1,542 | 39 | 5 |
| கறுவாச்சுருள் | 9,498 | 9,774 | 11,056 | 3 | 13 |
| கறுவா இலை எண்ணெய் | 138 | 180 | 195 | 30 | 8 |
| மிளகு | 4,734 | 4,708 | 3,665 | -1 | -22 |
| கராம்பு | 1,550 | 1,551 | 1,500 | - | - |
| ஏலம் | 30 | 40 | 40 | 33 | - |
| சாதிக்காயும் சாதிப்பத்திரியும் | 937 | 939 | 988 | - | 5 |
| சிற்றெனல்லா (புல்லெண்ணெய்) | 140 | 150 | 180 | 7 | 20 |

(அ) தற்காலிகமானவை

மூலம் : வேளாண்மை ஏற்றுமதித்திணைக்களம்

வீழ்ச்சிக்கு பூக்கும் காலத்தில் நிலவிய பாதகமான வானிலைத் தன்மைகளும் 1993, 1994 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் பாரிய விளைச்சலின் பின் தாவரங்களின் பௌதீக அழுத்தம் பங்களிப்புக் காரணிகளாக விளங்கின. 1995 இல் மிளகு உற்பத்தி 1994 இல் அறுவடை செய்யப்பட்ட 4,708 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் 22 சதவீதத்தால் 3,665 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இதேவேளை, அண்மைக்காலங்களில் கீழ்நோக்கிய போக்கைக் காட்டிய கராம்பு உற்பத்தி 1995 இல் மேலும் 3 சதவீதத்தால் 1,500 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

1995 இல் ஏனைய அனைத்து ஏற்றுமதிப் பயிர்களின் கீழும்காணப்பட்ட நிலப்பரப்பின் ஒன்று சேர்ந்த அளவு 1 சதவீதத்தால் 69,442 எக்டேயர்களுக்கு அதிகரித்தது. கொக்கோ, மிளகு என்பனவற்றின் நிலப்பரப்பு முறையே 440 எக்டேயராலும், 480 எக்டேயராலும், 8,511 எக்டேயர்களுக்கும் 12,092 எக்டேயர்களுக்கும் விரிவடைந்தமையே இவ்வதிகரிப் பிற்கான முக்கிய பங்களிப்புக் காரணியாக விளங்கியது.

1995 இல் ஏற்றுமதி வேளாண்மைப் பயிர்கள் உதவிக்கொடுப்பனவுத் திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட உதவிக்கொடுப்பனவுகள் 1994 இன் ரூ. 150 இலட்சத்திற்கெதிராக 180 இலட்சமாக விளங்கியது. இப்பகிர்ந்தளிப்புக்களின் 71 சதவீதத்தை மிளகு மற்றும் கறுவா உற்பத்தியாளர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

1995 இல் முதன்மை வேளாண்மை உற்பத்திப் பொருட்கள் பலவற்றின் விலைகள் மேம்பாடடைந்தன. 1995 இல் கறுப்பு மிளகின் உலகவிலை 39 சதவீதத்தால் கி. கி. ஒன்றிற்கு ரூ. 139 இற்கு அதிகரித்தது. இது கடந்த பத்து ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட இரண்டாவது உச்சவிலையாக விளங்கியது. 1995 இல் மிளகின் உள்நாட்டுப் பண்ணை விலையும் 43 சதவீதத்தால் கி. கி. ஒன்றுக்கு ரூ. 111 இற்கு அதிகரித்தது. இதேபோன்று கோப்பியின் ஆண்டுச் சராசரி பன்னாட்டு விலை 15 சதவீதத்தால் கி. கிறாம் ஒன்று ரூ. 150 இற்கு அதிகரித்திருக்கையில் கோப்பியின் பண்ணை விலை 25 சதவீதத்தால் கி. கிறாமொன்று ரூ. 98 இற்கு அதிகரித்தது. 1995 இல் கராம்பின் பண்ணை விலை 15 சதவீதத்தினால் கி. கிறாமொன்று ரூ. 52 இற்கு மேம்பாடடைந்தது. இதேவேளை 1995 இல் ஏலக்காயின் ஆண்டுச் சராசரி பண்ணைவிலை 2 சதவீதத்தினால் கி. கிறாம் ஒன்று ரூ. 337 இற்கு அதிகரித்திருக்கையில் கொக்கோவின் விலை 8 சதவீதத்தினால் கி. கிறாம் ஒன்று ரூ. 49 இற்கு வீழ்ச்சியடைந்தது.


1990 இன் மத்தியநில நிரந்தரப் பயிர் அபிவிருத்தித் செயற்றிட்டம் வேளாண்மை யாளர்களுக்கு 1995 இலும் தொடர்ந்து உதவிகளை வழங்கியது. 1995 இறுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்கள் ரூ. 5,860 இலட்சமாக விளங்கின. இது ரூ. 6,500 இலட்சம் கொண்ட மொத்த ஒதுக்கீட்டில் கிட்டத்தட்ட 90 சதவீதமாகும். இக்கடன்களின் கீழான மொத்த நிலப்பரப்பு இலக்கிடப்பட்ட 6,000 எக்டேயர்களுக்கெதிராக 5,055 எக்டேயர்களாக விளங்கியது.

## 3.4. உள்நாட்டு வேளாண்மை

### நெல்

மேம்பாடடைந்த சிறுபோக மற்றும் பெரும்போகப் பயிர்ச் செய்கையின் காரணமாக 1995 இல் நெல் உற்பத்தி 5 சதவீதத்தினால் 28 இலட்சம் மெற்றிக் தொன்களுக்கு (1,350 இலட்சம் புசல்கள்) அதிகரித்தது. சாதகமான வானிலை நிலைமைகள், எக்டேயருக்கான அதிகரித்த வளமாக்கிப் பயன்பாடு உரிய நேரத்திற்குக் கிடைக்கத்தக்கதாகவிருந்த வசதிகள் போன்றன 1995 இன் இந்த அதிகரித்த விளைச்சலுக்குப் பொறுப்பாக இருந்தன.

1994 / 95 பெரும்போகத்தில் நெல் உற்பத்தி 17.6 இலட்சம் மெற்றிக் தொன்கள் என (840 இலட்சம் புசல்கள்) மதிப்பிடப்பட்டதுடன் மொத்த உற்பத்தியில் ஏறத்தாழ 63 சதவீதத்திற்கும் வகைகூறியது. இது முன்னைய பெரும்போகத்தில் பதிவு செய்யப்பட்ட உற்பத்தியிலும் பார்க்க 5 சதவீதம் கூடுதலாக இருந்ததுடன் 1983 இன் பின்னர் பதிவுசெய்யப்பட்ட இரண்டாவது மிகச்சிறந்த பெரும்போக உற்பத்தி இதுவாகும். பெரும்போகத்தின் முன்னேற்றமடைந்த செயலாற்றத்திற்கு முன்னைய பெரும்போகத்துடன் ஒப்பிடுகையில் விதைக்கப்பட்டு அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பில் வீழ்ச்சிகாணப்பட்டபோதும் உயர்ந்த விளைச்சலே முழுமையான காரணமாகும். தொடர்ச்சியாக எட்டாவது ஆண்டாக குருநாகல் மாவட்டம் பெரும்போகத்தில் 224,000 மெற்றிக் தொன்கள் அல்லது பெரும்போக உற்பத்தியில் 13 சதவீதம் கொண்ட உச்சமட்ட உற்பத்தியைப் பதிவுசெய்தது. குருநாகல், அனுராதபுரம், பொலனறுவை, அம்பாறை மாவட்டங்கள் ஒன்று சேர்ந்து மொத்தப் பெரும்போகத்தில் 45 சதவீதத்திற்கு வகைகூறின.




1995 சிறுபோகத்தில் நெல் உற்பத்தி தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக அதிகரித்ததுடன் 10.5 இலட்சம் மெற்றிக் தொன்கள் (500 இலட்சம் புசல்கள்) என மதிப்பிடப்பட்டது. முன்னைய சிறுபோகத்தில் பதிவுசெய்யப்பட்ட உற்பத்தியிலும் பார்க்க இது 3 சதவீதம் கூடுதலானதாகும். அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு அதேபோன்று விளைச்சலில் ஏற்பட்ட முன்னேற்றம் என்பன சிறுபோகத்தின் உள்ளார்ந்த உற்பத்திக்கு உதவின. அம்பாறை மாவட்டம் 198,000 மெற்றிக் தொன் கொண்ட மிக உயர்ந்த உற்பத்தி மட்டத்தைப் பதிவு செய்ததுடன் சிறுபோக உற்பத்தியில் ஏறத்தாழ ஐந்திலொரு பகுதிக்கு வகைகூறியது. இப்பருவ காலத்தில் அம்பாறை, பொலனறுவை, குருநாகல் மாவட்டங்களின் மொத்த நெல் உற்பத்தி முழுச் சிறுபோக உற்பத்தியிலும் ஏறத்தாழ 48 சதவீதத்திற்கு வகை கூறியது.

1995 இல் எக்டேயரொன்றிற்கான நெல்லின் ஆண்டுச் சராசரி விளைச்சல் முன்னைய ஆண்டினைவிட 5 சதவீதத்தினால் 3,535 கி. கிறாம்களுக்கு அதிகரித்தது. இது 1987 இற்குப் பின்னர் பதிவுசெய்யப்பட்ட மிகச் சிறந்த விளைவாகும். இரு போகங்களிலும் ஏற்பட்ட திருந்திய செயலாற்றம் 1995 இன் பொதுவான சராசரி விளைச்சல் முன்னேற்றமடைய உதவியது. 1994/95 பெரும்போகத்தில் சராசரி விளைச்சல் எக்டேயரொன்றிற்கு 3,603 கி. கிறாம்களுக்கு 8 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. முன்னைய சிறுபோகத்தில் 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த எக்டேயர் ஒன்றுக்கான சராசரி விளைச்சல் 1995 சிறுபோகத்தில் 3,427 கி. கிறாம்களுக்கு உயர்ந்து ஒரு சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. பெரும்போகத்தில் மகாவலி 'எச்' பிரதேசம் எக்டேயரொன்றிற்கு என்றுமில்லாத மிக உயர்ந்த மட்டமான 5,340 கி. கிறாம் விளைச்சலைப் பதிவுசெய்ததன்மூலம் அதன் முதன்மையிடத்தை மீண்டுமொருமுறை அடைந்ததுடன் எக்டேயருக்கு 4,888 கி. கிறாம்கள் சராசரி விளைச்சலைப் பெற்ற உடவளவைப் பிரதேசத்தினை இரண்டாமிடத்திற்குத் தள்ளியது. எனினும் தொடர்ந்து பத்தாவதாண்டாக சிறுபோகத்தில் உடவளவைப் பிரதேசம் எக்டேயரொன்றிற்கு மிக உயர்ந்த விளைச்சலாக 4,669 கி. கிறாம்களைப் பதிவு செய்தது.

1994/95 பெரும்போகத்தில் பெரிய, சிறிய நீர்ப்பாசனங்களைப் பெற்ற பரப்புக்களின் சராசரி விளைச்சல் முன்னைய பெரும்போகத்துடன் ஒப்பிடுகையில் முறையே 15 சதவீதத்தினாலும், 7

## அட்டவணை 3,6

### நெல்துறை மீதான புள்ளி விபரங்கள் 1994 - 1995

| விடயம் | அலகு | 1994 (அ) | | | 1995 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பளவு | '000 எக்டேயர்கள் | 581 | 349 | 930 | 566 | 348 | 915 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்தப் பரப்பளவு | '000 எக்டேயர்கள் | 561 | 336 | 897 | 549 | 340 | 890 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய பரப்பளவு | '000 எக்டேயர்கள் | 499 | 299 | 798 | 489 | 306 | 795 |
| உற்பத்தி | '000 மெ. தொன்கள் | 1,670 | 1,014 | 2,684 | 1,761 | 1,049 | 2,810 |
| | ('000 புசல்கள்) | 80,054 | 48,616 | 128,670 | 84,407 | 50,271 | 134,678 |
| விளைச்சல் (இ) | கி. கிறாம்கள் எக்டேயர்கள் | 3,345 | 3,393 | 3,363 | 3,603 | 3,427 | 3,535 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ. ப. இ. | 453 | 207 | 660 | 570 | 236 | 806 |
| உ. வி. தி. கீழ் கொள்வனவு செய்யப்பட்டவை (ஈ) | '000 மெ. தொன்கள் | 69 | 51 | 120 | 197 | 85 | 282 |
| அரிசி இறக்குமதி | '000 மெ. தொன்கள் | – | – | 58 | – | – | 9 |
| (நெல்லிற்குச் சமன்) | ('000 மெ. தொன்கள்) | (-) | (-) | (85) | (-) | (-) | (14) |

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) பெரும்போக, சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு, பயிர் அறுவடை அளவீடுகளின் அடிப்படையில் அமைந்த குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்றது. அதேவேளையில், மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் மொத்த விளைவு கணக்கிடப்படுகின்றது.

மூலங்கள் : குடிமதிப்பு புள்ளி விபரத்திணைக்களம்,
வேளாண்மைத் திணைக்களம்,
வேளாண்மை, காணிகள், காடாக்கல் அமைச்சு,
நெற் சந்தைப்படுத்தும் சபை,
இலங்கைச் சுங்கம்,
இலங்கை மத்திய வங்கி.

சதவீதத்தினாலும் 3,923 கி. கிறாம்களுக்கும் 3,292 கி. கிறாம்களுக்கும் அதிகரித்தன. எனினும் 1994/95 பெரும்போகத்தில் மழைநீரை நம்பிய பிரதேசங்களின் சராசரி விளைச்சல் எக்டேயருக்கு 2,814 கி. கிறாம்களுக்கு 1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1995 சிறுபோகத்தில் முக்கிய நீர்ப்பாசன பிரதேசங்களில் சராசரி விளைச்சல் எக்டேயருக்கு 3,529 கிறாம்களுக்கு 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. அதேவேளை 1995 சிறுபோகத்தில் சிறுநீர்ப்பாசன பிரதேசங்களினதும் மழை நீரை நம்பிய பிரேதசங்களினதும் சராசரி விளைச்சல் 3,062 கி. கிறாம்களுக்கும், 2,525 கி. கிறாம்களுக்கும் முறையே 7 சதவீதத்தினாலும், 2 சதவீதத்தினாலும் அதிகரித்தன.

இப்பயிர்ச் செய்கையாண்டில் நெல் விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு 915,000 எக்டேயர்களுக்கு 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பரப்பளவில் ஏற்பட்ட வீழ்ச்சி இரு போகங்களிலும் பிரதிபலித்தது. பெரும்பொகத்தில் விதைக்கட்பட்ட மொத்த நிலப்பரப்பு 566,000 எக்டேயர்களுக்கு 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தவேளையில் சிறுபோகத்தின் அத்தகைய பரப்பளவும் 348,000 எக்டேயர்களுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. 1995 பயிர்ச் செய்கையாண்டில் அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு முன்னைய பயிர்ச் செய்கையாண்டின் 897,000 எக்டேயர்களிலிருந்து 890,000 எக்டேயர்களுக்கு 1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும் பெரும்போகத்தில் அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு 549,000 எக்டேயர்களுக்கு 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் 1995 சிறுபோகத்தின் பரப்பளவு 340,000 எக்டேயர்களுக்கு 1 சதவீதத்தினால் அதிகரித்தது.

தேசிய வளமாக்கிச் செயலகத்தின் படி, 1994/95 பயிர்ச் செய்கையாண்டில் நெற்றுறையில் பயன்படுத்தப்பட்ட வளமாக்கி 287,000 மெற்றிக் தொன்களுக்கு 17 சதவீதத்தினால் உயர்வடைந்தது. வளமாக்கிப் பயன்பாட்டில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு 1994 ஒத்தோபரில் மீள அறிமுகப்படுத்தப்பட்ட வளமாக்கி உதவுதொகை காரணமாக இருந்ததுடன் இது 1994/95 பெரும்போகத்தின் தொடக்கத்துடன் பொருந்திக் காணப்பட்டது. 1994/95 பெரும்போகத்தில் நெற் செய்கையில் பயன்படுத்தப்பட்ட வளமாக்கி 171,000 மெற்றிக் தொன்களுக்கு 20 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தவேளையில் 1995 சிறுபோகத்தில் அவ்வாறு பயன்படுத்தப்பட்ட

வளமாக்கியும் 116,000 மெற்றிக் தொன்களுக்கு 12 சதவீதத்தினால் அதிகரித்தது.

வளமாக்கியின் அதிகரித்த பயன்பாட்டிற்கு மற்றைய காரணிகளுடன், கடந்த காலத்தில் செலுத்தப்படவேண்டிய பயிர்ச் செய்கைக் கடன்கள் அரசினால் பதிவழிக்கப்பட்டதன் விளைவாக 1994/95 பெரும்போகத்திலிருந்து கொடுகடனுக்கு விண்ணப்பிப்பதற்கு கூடுதலான வேளாண்மை யாளர்கள் தகைமை பெற்றிருந்தமையின் காரணமாக நெற்றுறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் மிக்ககூடியளவில் அதிகரித்தமையும் உதவியது. 1994/95 பயிர்ச் செய்கையாண்டில் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின்கீழ் நெற்றுறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 1993/94 பயிர்ச்செய்கையாண்டில் வழங்கப்பட்ட ரூ. 6,600 இலட்சத்திற்கெதிராக ரூ. 8,060 இலட்சமாகக் காணப்பட்டது. 1994/95 பெரும்போகத்தில் வழங்கப்பட்ட ரூ. 4,530 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 5,700 இலட்சத்திற்கு 26 சதவீதத்தினால் அதிகரித்தது. 1995 சிறுபோகத்தில் வழங்கப்பட்ட கொடுகடனும் முன்னைய சிறு போகத்தினைவிட 14 சதவீதத்தினால் ரூ. 2,360 இலட்சத்திற்கு அதிகரித்தது.

நெற் சந்தைப்படுத்தும் சபையின் நெல் கொள்வனவுகளில் இரண்டு மடங்கு அதிகரிப்புக் காணப்பட்டது. 1994 இன் 120,000 மெற்றிக் தொன் கொள்வனவிற்கெதிராக 1995 இல் நெற்சந்தைப் படுத்தும் சபை 282,000 மெற்றிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்ததுடன் இது மொத்த நெல் உற்பத்தியில் 10சதவீதத்திற்கும் வகைகூறியது. நெல்லின் சிறந்த சந்தை விலைகள் குறிப்பாக அறுவடை காலத்தில் உத்தரவாத விலைக்கும் மிகக்கீழே வீழ்ச்சியடைந்தமையானது 1995 இல் பெருமளவு நெல்லினை நெற்சந்தைப்படுத்தும் சபை கொள்வனவு செய்வதனை இயலச் செய்தது. முன்னைய ஆண்டினைப் போன்றே 1995 இலும் நெல்லின் உத்தரவாதவிலை புசலொன்றுக்கு ரூ. 155 இல் மாற்றமின்றி இருந்ததெனினும் சந்தை விலைகள் புசலொன்றிற்கு கிட்டத்தட்ட ரூ. 136 ஆகக் காணப்பட்டது. 1995 இன் பிற்பகுதியில் கோதுமை மாவின் உதவுதொகை ஓரளவு நீக்கப்பட்டமையானது உதவுதொகையினால் உருவாக்கப்பட்ட திரிபுகளை சரிசெய்வதில் வரவேற்கத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியதுடன் நெல் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியையும் ஓரளவு கட்டுப்படுத்த உதவியது.

விரயம் மற்றும் விதை நெல் தேவைகளுக்கும் சீராக்கம் செய்தபின்னர் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லுக்குச் சமமான அரிசியின் அளவு 18 இலட்சம் மெற்றிக் தொன்களாகக் காணப்பட்டது. நெல்லின் அதிகரித்த உற்பத்தியின் விளைவாக 1995 இல் அரிசி இறக்குமதி 1994 இல் இறக்குமதி செய்யப்பட்ட 58 ஆயிரம் மெற்றிக் தொன்களிலிருந்து 9 ஆயிரம் மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. கடந்த அண்மைக் காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் மிகச்சிறிய தொகை இதுவேயாகும். எனினும் இவ்வாண்டில் கோதுமைத்தானியத்தின் இறக்குமதிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 11 இலட்சம் மெற்றிக் தொன்களுக்கு 28 சதவீதத்தினால் அதிகரித்தன. மிக உயர்ந்த பன்னாட்டு விலைகள் காணப்பட்டபோதும், கோதுமைத் தானியத்தின் இறக்குமதிகளில் கணிசமான அதிகரிப்புக் காணப்பட்டமைக்கு பெருமளவிற்கு உதவுதொகை வழங்கப்பட்ட கோதுமைமாவின் விலைகளே காரணமாக இருந்ததுடன் இது அரிசிக்குப் பதிலாக கோதுமை மாவிற்கான கேள்வியை அதிகரித்தது.

### சீனி

1995 இல் சீனி உற்பத்தி 71,416 மெற்றிக் தொன்களாக மதிப்பிடப்பட்டதுடன் 1994 இல் பதிவுசெய்யப்பட்ட உச்சமட்ட உற்பத்தியான 72,275 மெற்றிக் தொன்களிலும் பார்க்க 1 சதவீதம் குறைவானதாகும். மொத்த வெளியீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு இங்குரான தொழிற்சாலையின் உற்பத்தி 1994 இன் 14,058 மெற்றிக் தொன்களிலிருந்து 1995 இல் 9,681 மெற்றிக் தொன்களுக்கு 31 சதவீதத்தினால் குறைவடைந்தமையே ஓரளவு காரணமாகும். அதேவேளை 1995 இல் பெல்வத்தை, செவனகல தொழிற்சாலைகளின் சீனி உற்பத்தி முறையே 9 சதவீதத்தினாலும் 1 சதவீதத்தினாலும் 39,682 மெற்றிக் தொன்களிலிருந்து 43,081 மெற்றிக் தொன்களுக்கும் 18,535 மெற்றிக் தொன்களிலிருந்து 18,654 மெற்றிக் தொன்களுக்கும் அதிகரித்தன. முன்னைய ஆண்டினைப் போன்றே 1995 இல் கந்தளாய்த் தொழிற்சாலையில் சீனி உற்பத்தி நடைபெறவில்லை.

இங்குரான தொழிற்சாலையில் சீனி உற்பத்தி வீழ்ச்சியடைந்தமைக்கு ஆய்விற்குரிய ஆண்டில் சீனி பெறும் வீதமும் அதேபோன்று பிழியப்பட்ட கரும்பின் அளவும் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். இங்குரானவில் பிழியப்பட்ட கரும்பின் அளவு ஓராண்டிற்கு முன்னர் பிழியப்பட்ட 188,822 மெற்றிக் தொன்களிலிருந்து 145,125 மெற்றிக் தொன்களுக்கு 23 சதவீத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. மாறாக செவனகல தொழிற்சாலையில் பிழியப்பட்ட கரும்பின் அளவு 221,801 மெற்றிக் தொன்களுக்கு 5 சதவீதத்தினால்

## அட்டவணை 3.7

## சீனி உற்பத்தி மீதான புள்ளி விபரங்கள் 1994 – 1995

| விடயம் | அலகு | இங்குரானை சீனித் தொழிற்சாலை | | செவனகலை சீனித் தொழிற்சாலை | | பெல்வத்தை சீனித் தொழிற்சாலை | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1994 (அ) | 1995 (ஆ) | 1994 (அ) | 1995 (ஆ) | 1994 (அ) | 1995 (ஆ) | 1994 (அ) | 1995 (ஆ) |
| 1. கரும்பு பயிரிடப்பட்ட நிலப்பரப்பு (முளை தோன்றியதும்) (இ) | எக்டேயர்கள் | 3,019 | 2,098 | 3,460 | 3,130 | 5,032 | 5,346 | 11,511 | 10,574 |
| 2. அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு (இ) | எக்டேயர்கள் | 2,505 | 1,920 | 2,331 | 2,503 | 8,543 | 9,151 | 13,379 | 13,574 |
| 3. அறுவடை செய்யப்பட்ட கரும்பு (இ) | மெ. தொன்கள் | 140,217 | 79,542 | 210,105 | 219,903 | 246,105 | 325,998 | 596,427 | 625,443 |
| 4. தனியாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கரும்பு | மெ. தொன்கள் | 48,605 | 65,583 | 1,748 | 1,898 | 227,210 | 248,902 | 277,563 | 316,383 |
| 5. பிழியப்பட்ட கரும்பின் அளவு | மெ. தொன்கள் | 188,822 | 145,125 | 211,853 | 211,801 | 473,315 | 547,900 | 873,990 | 914,826 |
| 6. சராசரி விளைச்சல் (இ) | மெ. தொன்கள்/ எக்டேயர் | 56 | 41 | 90 | 88 | 55 | 60 | 67 | 67 |
| 7. உற்பத்தி செய்யப்பட்ட சீனி (கூட்டப்பட்டவை தவிர்ந்த) | மெ. தொன்கள் | 14,058 | 9,681 | 18,535 | 18,654 | 39,682 | 43,081 | 72,275 | 71,416 |
| 8. சீனி பெறப்பட்ட வீதம் (ஈ) | % | 7.45 | 6.67 | 8.74 | 8.41 | 8.38 | 7.49 | 8.27 | 7.81 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) முதன்மைத் தோட்டங்களையும் ஒதுக்கீட்டாளர்களையும் உள்ளடக்கும்.
(ஈ) கரும்பு பிழிதல் வீதம் $= \frac{\text{சீனி உற்பத்தி}}{\text{ஆலையிடப்பட்ட கரும்பின் அளவு}} \times 100$

மூலங்கள் : வரையறுக்கப்பட்ட பெல்வத்தை சீனிக் கைத்தொழில்கள்
வரையறுக்கப்பட்ட கந்தளாய் சீனிக் கைத்தொழில்கள்
வரையறுக்கப்பட்ட செவனகலை சீனிக் கைத்தொழில்கள்
வரையறுக்கப்பட்ட இங்குரானை சீனிக் கைத்தொழில்கள்

அதிகரித்தவேளையில் இவ்வாண்டில் பெல்வத்தை தொழிற்சாலையில் பிழியப்பட்ட கரும்பின் அளவு முன்னைய ஆண்டினைவிட 16 சதவீதத்தினால் 547,900 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. இவ்வாண்டில் அனைத்து மூன்று தொழிற்சாலைகளிலும் பிழியப்பட்ட கரும்பின் அளவு 1994 இல் பிழியப்பட்ட 873,990 மெற்றிக் தொன்களிலிருந்து 914,826 மெற்றிக்தொன்களுக்கு 5 சதவீதத்தினால் அதிகரித்தது.

மூன்று தொழிற்சாலைகளினதும் மொத்தமாகச் சீனி பெறும் வீதம் தொடர்ச்சியாக மூன்றாவதாண்டாக தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்ததுடன் 1995 இல் இது முன்னைய ஆண்டின் 8.27 சதவீதத்திலிருந்து 7.81 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. செவனகல தொழிற்சாலை தொடர்ந்து ஆறாவதாண்டாக சிறந்த தனிப்பட்ட மீள்பெறுகை வீதத்தினைப் பதிவுசெய்தது.

இங்குரான, செவனகல தோட்டங்களினதும் கரும்பின் சராசரி விளைச்சல் எக்டேயரொன்றிற்கு 41 மெற்றிக் தொன்களுக்கும், 88 மெற்றிக் தொன்களுக்கும் முறையே 27 சதவீதத்தினாலும் 2 சதவீத்தினாலும் வீழச்சியடைந்தது. 1994 இல் 23 சதவீதத்தினால் அதிகரித்த பெல்வத்தையின் சராசரி விளைச்சல் 1995 இல் எக்டேயரொன்றிற்கு 60 மெற்றிக் தொன்களுக்கு உயர்ந்து மேலும் 9 சதவீதங்கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. செவனகல தொடர்ந்து தொடர்ச்சியாக ஐந்தாவதாண்டாக உயர்ந்த சராசரி விளைச்சலைப் பதிவுசெய்தது. இம்மூன்று தொழிற்சாலைகளினாலும் பேணப்படும் அனைத்து மூன்று தோட்டங்களினதும் பொதுவான சராசரி விளைச்சல் 1994 இன் அதே மட்டத்தில் காணப்பட்டது.

1995 இல் சீனித் தொழிற்சாலைகளுக்கு தனிப்பட்ட பயிர்ச் செய்கையாளர்களினால் வழங்கப்பட்ட கரும்பின் அளவு 316,383 மெற்றிக் தொன்களுக்கு 14 சதவீதத்தினால் உயர்வடைந்தது. இங்குரானவின் கரும்புக்கொள்வனவு 65,583 மெற்றிக் தொன்களுக்கு 35 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது. அதேவேளை செவனகலவிலும் பெல்வத்தையிலும் கொள்வனவு செய்யப்பட்ட கரும்பின் அளவு 1,898 மெற்றிக் தொன்களுக்கும் 248,902 மெற்றிக் தொன்களுக்கும் முறையே 9 சதவீதத்தினாலும் 10 சதவீதத்தினாலும் அதிகரித்தது. இவ்வாண்டில் மொத்தமாகப் பிழியப்பட்ட கரும்பில் தனியாரிடமிருந்தான கரும்பின் கொள்வனவு 1994 இல் பதிவுசெய்யப்பட்ட 32 சதவீதத்திற்கெதிராக 35 சதவீதத்திற்கு வகைகூறியது.

தற்பொழுது உள்நாட்டுச் சீனிஉற்பத்தி நாட்டின் சீனி நுகர்வுத் தேவையில் 15 சதவீதத்தினை ஈடுசெய்யமட்டுமே போதுமானதாக இருக்கிறது. 1995 இல் இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் அளவு 1994 இல் இறக்குமதி செய்யப்பட்ட 491,000 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் 416,909 மெற்றிக் தொன்களாக விளங்கியது.

### ஏனைய களப்பயிர்கள்

ஏனைய களப்பயிர்கள் மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற உயர்ந்த பெறுமதி கொண்ட பணப்பயிர்களிலிருந்து சோளம், குரக்கன் போன்ற தாழ்ந்த பெறுமதி கொண்ட தானியங்கள் வரை வேறுபடும் பலதரப்பட்ட பயிர்களின் தொகுதியை உள்ளடக்கியுள்ளது. மேலே குறிப்பிட்ட உயர்ந்த பெறுமதியான பயிர்கள் நீங்கலாக மற்றைய அனைத்துக் களப்பயிர்களும் வீட்டுத் தோட்டங்களில் அல்லது சிறிய நிலத்துண்டுகளில் அவ்வப்போதைய முறையில் பயிர்செய்யப்படுகின்றன.

வேளாண்மை, காணி மற்றும் காடாக்கல் அமைச்சின் தற்காலிக மதிப்பீடுகளின்படி 1995 இல் உருளைக்கிழங்கு, சோயாஅவரை, எள்ளு என்பனவற்றின் உற்பத்தி குறிப்பிடத்தக்களவிற்கு முன்னேற்றம் கண்டது. உருளைக்கிழக்கு அறுவடை 101,600 மெற்றிக் தொன்களுக்கு 44 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் கடந்த அண்மைக்காலத்தில் மிகச் சிறந்ததிலொன்றாகவுமிருந்தது. விளைச்சலில் ஏற்பட்ட முன்னேற்றம், அதேபோன்று பயிரிடப்பட்ட பரப்பளவில் ஏற்பட்ட அதிகரிப்பு ஆகிய இரண்டும் இவ்வதிகரித்த உற்பத்திக்கு உதவின. இவ்வாண்டில் உருளைக்கிழங்கின் விளைச்சல் எக்டேயர் ஒன்றிற்கு 1994 இல் அடையப்பட்ட 8,300 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் 11,250 மெற்றிக் தொன்களுக்கு 36 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. உருளைக்கிழங்கின் விளைச்சலிலும் பயிரிடப்பட்ட நிலப்பரப்பிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டமைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சிறந்ததர விதை உருளைக்கிழங்கு பெருமளவில் கிடைக்கத்தக்கதாக இருந்தமை, சாதமகமான வானிலை நிலைமைகள், மரபுவழியற்ற பிரதேசங்களுக்கு பயிர்ச்செய்கை விரிவாக்கப்பட்டமை என்பனவே காரணங்களாகும். எள்ளு உற்பத்தி 1994 இன் 3,500 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் 6,100 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்து 74 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. எனினும், 1995 இன் எள்ளு உற்பதி 1991 இல் பதிவுசெய்யப்பட்ட உச்ச உற்பத்தியிலும் பார்க்க அரைப்பங்கிற்கும் குறைவானதாக இருந்தது. அதற்கு வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள குழப்பப் பகுதிகளிலும் குறிப்பிட்ட எல்லைக் கிராமங்களிலும் காணப்பட்ட குறைந்த உற்பத்தியே காரணமாகும்.

1995 இல் ஏனைய களப்பயிர்களில் மற்றைய பெரும்பாலான பயிர்களின் உற்பத்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மிகக்குறைவாக இருந்தது. (புள்ளிவிபரப் பின்னிணைப்பு அட்டவணை 16) 1994 இல் முன்னெப்பொழுதுமில்லாத 81,400 மெற்றிக் தொன் உச்சமட்ட உற்பத்தியை பதிவுசெய்த பெரிய வெங்காயம் 1995 இல் 44,500 மெற்றிக் தொன்களுக்கு 45 சதவீதத்தினால் மிகக்கடுமையாக வீழ்ச்சியடைந்தது. பெரிய வெங்காயப் பயிர்ச் செய்கையாளர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் குறிப்பாக 1994 இன் செழிப்பான பயிர் உற்பத்தியின் பின்னரான சந்தைப் பிரச்சினைகள் அதனைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் இப்பயிர்களின் பயிர்ச் செய்கையை ஊக்கமிழக்கச் செய்தன. பெரிய வெங்காயத்தின் கீழான நிலப்பரப்பு 1994 இன் 7,800 எக்டேயர்களிலிருந்து 1995 இல் 4,400 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது. சின்னெவங்காயம், மிளகாய், பயறு, என்பனவற்றின் உற்பத்தி 1994 உடன் ஒப்பிடுகையில் முறையே 18 சதவீத, 10 சதவீத, 8 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தன. 1995 இல் இப்பயிர்களின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தமைக்கு குறிப்பாக 1994/95 பெரும்போகத்தில் வானிலை நிலைமைகள் நெற் செய்கைக்கு மிகச் சாதகமாக இருந்தமையால் இவை பயிரிட பட்ட பரப்பளவு குறைவடைந்தமையே காரணமாக இருந்தது.

நெற் சந்தைப்படுத்தும் சபையினால் தொழிற்படுத்தப்பட்ட சிறு உணவுப் பயிர்களுக்கான அடிமட்ட விலைத்திட்டமானது 1995 இலும் தொடர்ந்து நடைமுறையிலிருந்தது. அடிமட்ட விலைகள் 1993 இன் பின்னர் மாற்றப்படவில்லை. இதன்விளைவாக, அடிமட்ட விலைகள் கவர்ச்சியற்றனவாக மாறியதுடன் தனியார் வர்த்தகர்கள் நெற்சந்தைப்படுத்தும் சபையுடன் பேட்டியிடும் மிகத்தீவிரமான சந்தைப் பங்கேற்பாளர்களாக மாறினர்.

### 3.5. மீனும் கால்நடையும்

கடற்றொழில் நீர்வாழ் உயிரின மூலவள அபிவிருத்தி அமைச்சின் மதிப்பீடுகளின்படி 1995 இன் மீன் உற்பத்தி 237,550 மெற்றிக் தொன்களாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 6 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். கடல்சார் மற்றும் அலங்கார மீன் வளர்ப்பு ஆகிய இரு துறைகளும் இவ்வதிகரித்த உற்பத்திக்கு உதவின. அதேவேளை 1995 இல் கருவாட்டு உற்பத்தி 24

அட்டவணை 3.8

மீன் உற்பத்தி 1991 - 1995

(மெற்றிக் தொன்கள்)

| துணைத்துறை | 1991 | 1992 | 1993 | 1994(அ) | 1995 (ஆ) |
|---|---|---|---|---|---|
| கரையோர (இ) | 174,231 | 185,168 | 202,900 | 212,000 | 217,550 |
| ஆழ்கடலும் கரைக்கு அப்பாலும் (ஈ) | 23,832 | 21,000 | 18,000 | 12,000 | 20,000 |
| மொத்தம் | 198,063 | 206,168 | 220,900 | 224,000 | 237,550 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது

(ஆ) தற்காலிகமானவை

(இ) கரையோர மற்றும் ஆழ்கடல்துறை

(ஈ) 1994 வரையுமான உள்ளூர்த்துறை கரையோர உப்புநீர் இறால் மற்றும் இறால் பண்ணை உற்பத்திகளை உள்ளடக்குகின்றது.

மூலம் : கடற்றொழில் நீர்வாழ் மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சு.

சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இவ்வாண்டில் கடல்மீன் உற்பத்தி அதிகரித்தமைக்கு இத்துறைக்கு புதிய படகுகள், எந்திரங்கள், மீன்பிடிக் கருவிகள் என்பன சேர்க்கப்பட்டமையும் அதேபோன்று 1995 ஏப்பிறல் இறுதிவரை வடக்கு கிழக்கு மாகாணத்தில் மோதல்கள் நிறுத்தப்பட்டமையுமே காரணங்களாகும். மேலும் ஒரு நாள் படகுகளிலிருந்து பலநாள் கலம்களுக்கு மாறும் தன்மை அதிகரித்தமையும் வெளியீடு முன்னேற்றமடைய காரணமாயிற்று. மீன் வளர்ப்பில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு சிறந்த முகாமைத்துவமும் நன்னீர் மீன்பிடியின் விரிவாக்கற் பணிகள் வலுப்படுத்தப்பட்டமையுமே காரணங்களாகும்.

மொத்த மீன் உற்பத்தியில் 92 சதவீதத்திற்கு வகை கூறும் கடல்மீன்பிடித் துணைத்துறை, 1994 இல் பதிவு செய்யப்பட்ட 212,000 மெற்றிக் தொன்களிலிருந்து 1995 இல் 217,550 மெற்றிக் தொன்களுக்கு 3 சதவீதத்தினால் அதிகரித்தது. கடந்த காலங்களைப் போன்றே மீன்பிடித்துறையில் தனியார்துறை மிக முன்னணிப் பங்கினைக் கொண்டிருந்ததுடன் மொத்த மீன் உற்பத்தியில் ஏறத்தாழ 99 சதவீதத்திற்கு வகைகூறின. 1995 இல் இலங்கைக் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் மொத்த மீன் வழங்கல் 2,400 மெற்றிக் தொன்களுக்கு 8 சதவீதத்தினால் அதிகரித்தது. முன்னைய ஆண்டில் 18 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த இலங்கைக் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் உறைநீர்க் கட்டியுற்பத்தி 1995 இல் ஏறத்தாழ 5,090 மெற்றிக் தொன்களுக்கு 38 சதவீதத்தினால் உயர்வடைந்தமைக்கு அநுராதபுரத்திலும், பேசாலையிலுமுள்ள உறைநீர்க்கட்டித் தொழிற்சாலைகளில் உற்பத்தி மீளத் தொடங்கியமையே முக்கிய காரணமாகும்.

1995 இல் கடல்சார்துறைக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட உதவுதொகைகள் 1994 இல் பகிர்ந்தளிக்கப்பட்ட ரூ. 750 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ஏறத்தாள ரூ. 600 இலட்சமாகக் காணப்பட்டது. உற்பத்தியாளர் உதவு தொகைத் திட்டங்களின் கீழ் 196 எந்திரம் பொருத்தப்பட்ட நாள் படகுகளும், 40 பலநாள் படகுகளும், 333 மரபுவழிக்கலம்களும், 406 மீன்பிடிக்கருவி அலகுகளும் 19 சிறப்பு வானொலி தொடர்புக் கருவிகளும், 42 திசையறிகருவிகளும் கடல்சார் மீன்பிடித்துறைக்கு வழங்கப்பட்டன. முன்னைய ஆண்டில் 40 பலநாள் படகுகளும், 145 மரபுவழிக் கலங்களும், 69 எந்திரம் பொருத்தப்பட்ட நாள்படகுகளும் வழங்கப்பட்டன. முன்னைய ஆண்டினைப் போன்றே கடற்றொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கையும் அவற்றின் மொத்த உறுப்பினர் தொகையும் முறையே 769 ஆகவும் 86,966 ஆகவும் மாற்றமின்றியிருந்தன.

உற்பத்தி அதிகரித்திருந்தபோதும் அனைத்துவகை மீன்களினதும் சராசரி சில்லறை விலைகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ 22 சதவீதத்தினால் அதிகரித்தன. 1995 இல் மீன் ஏற்றுமதிகளின் மொத்த அளவும் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 7,194 மெற்றிக் தொன்களிலிருந்து 7,457 மெற்றிக் தொன்களுக்கு 4 சதவீதத்தினால் அதிகரித்தன. எனினும் தகரத்திலடைக்கப்பட்டும், கருவாடாகவும் இறக்குமதி செய்யப்பட்ட மீனின் மொத்த அளவும் இவ்வாண்டில் 68,348 மெற்றிக் தொன்களுக்கு 21 சதவீதத்தினால் அதிகரித்தது.

1995 இல் முட்டை உற்பத்தியில் தனியார்துறை தொடர்ந்தும் முக்கிய பங்கினை வகித்தது. மொத்த முட்டை உற்பத்தி 1994 இன் 8,630 இலட்சம் முட்டைகளிலிருந்து 1995 இல் 8,620 இலட்சம் முட்டைகளுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு கோழித்தீன் கைத்தொழிலில் காணப்பட்ட

ஏறத்தாழ தனியுரிமை நிலைமைகளின் விளைவாக கோழித்தீனின் உயர்ந்த விலைகளின் காரணமாக பல சிறு உற்பத்தியாளர்கள் இவ்வுற்பத்தியை கைவிட்டமையே முக்கிய காரணமாகும்.

1995 இல் பசுப்பால் உற்பத்தி 2,530 இலட்சம் இலிற்றர்களுக்கு சிறிதளவால் அதிகரித்தவேளையில், எருமைப்பால் உற்பத்தி 800 இலட்சம் இலீற்றர்களுக்கு 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1995 இல் வரையறுக்கப்பட்ட மில்க் இன்டஸ்றிஸ் ஒவ் லங்கா கூட்டுத்தாபனத்தினால் சேகரிக்கப்பட்டபாலின் அளவு 1994 இல் பதிவுசெய்யப்பட்ட 440 இலட்சம் இலீற்றர்களிலிருந்து 500 இலட்சம் இலீற்றர்களுக்கு 14 சதவீதத்தினால் அதிகரித்தது. அநுராதபுரம், மட்டக்களப்பு மாவட்ங்களின் உயர்ந்தளவு பால் சேகரிப்பே இப்பொதுவான அதிகரிப்பிற்கு உதவியது. வரையறுக்கப்பட்ட நெஸ்லே லங்கா, மற்றும் ஏனைய பால் சேகரிப்பு நிலையங்கள் என்பனவற்றினால் சேகரிக்கப்பட்டபாலும் 1994 இல் சேகரிக்கப்பட்ட 350 இலட்சம் இலீற்றர்களிலிருந்து 1995 இல் 380 இலட்சம் இலீற்றர்களுக்கு 9 சதவீதத்தினால் அதிகரித்தது. மொத்த பால் உற்பத்திகள் நாட்டின் பால் மற்றும் பால் உற்பத்திகளின் தேவைகளில் ஏறத்தாழ 30 சதவீதத்தினை மட்டுமே ஈடுசெய்கின்றது. இத்துறை பயன்மிக்க இறக்குமதிப்பதிலீடுகளைக் கொண்டிருக்கக் கூடியதொரு துறையாகும். 1995 இல் ஒரு இலீற்றர் பாலுக்காக உற்பத்தியாளருக்கு செலுத்தப்பட்ட விலைகள் அதிகரிக்கப்படாமையின் விளைவாக பால் உற்பத்தியாளர்களுக்கு குறைந்த வருமானமே கிடைத்தது. மேலும் முழுஆடைப் பால்மா இறக்குமதிக்கு (26 சதவீதத்திற்கு மேல் பால் கொழுப்பைக் கொண்ட) வழங்கப்பட்டிருந்த 10 சதவீத தீர்வை விலக்கல் நுகர்வோருக்கு நன்மையளித்ததெனினும் உள்ளூர் பாற்பண்ணைக் கைத்தொழிலுக்கெதிரானதொரு தடையாக விளங்கியது.

### 3.6. உள்ளீடுகளும் கொடுகடனும்

#### வளமாக்கி

1995 கலண்டர் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட வளமாக்கியின் மொத்த அளவு 506,400 மெற்றிக் தொன்களுக்கு 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு தெங்கு தவிர்ந்த அனைத்துப் பயிர்களினதும் வளமாக்கிப் பாவனையில் ஏற்பட்ட குறைப்பே காரணமாகும். நெற்றுறையில் வளமாக்கிப் பயன்பாடு 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இவ்வாண்டின் வளமாக்கிப் பயன்பாட்டில் 51 சதவீதத்திற்கு வகைகூறியமைக்கு பயிர்ச்செய்கைப் பரப்பில் ஏற்பட்ட குறைப்பே முக்கிய காரணமாகும். தேயிலைத்துறையில், 1995 இல் வளமாக்கிப் பயன்பாடு 120,300 மெற்றிக் தொன்களுக்கு 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1995 இல் இறப்பர்த்துறையின் வளமாக்கிப்பாவனை 14,900 மெற்றிக் தொன்களுக்கு 13 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. புகையிலை, காய்கறி, பழவகைகள், மலர்ச்செடிகள் போன்ற ஏனைய பயிர்களின் வளமாக்கிப் பாவனை 34,900 மெற்றிக் தொன்களுக்கு 10 சதவீதத்தினால் வீழ்சியடைந்தது. தெங்குத்துறையின் வளமாக்கிப் பாவனையில் 8 சதவீத அதிகரிப்புக் காணப்பட்டது. வளமாக்கி உதவுதொகை காணப்பட்டபோதும் (1994 ஒத்தோபர் 10இல் மீள அறிமுகப்படுத்தப்பட்டது) மொத்த வளமாக்கிப் பாவனையில் குறிப்பாக 1995 இன் இறுதிக்காலாண்டில் ஏறத்தாள 15 சதவீதமான குறைப்புக்காணப்பட்டது. இக்காலப்பகுதியில் வீழ்ச்சி காணப்பட்டமைக்கு வடகீழ் பருவக்காற்று மழை பொய்த்தமையும் அதன் விளைவாக ஏற்பட்ட வரட்சி நிலைமைகள் வளமாக்கி பாவனையைத் தூண்டத் தவறியமையுமே காரணமாகும். வளமாக்கிப் பாவனை வீழ்ச்சியடைந்தமைக்கு பன்னாட்டு வளமாக்கி விலைகள் அதிகரித்தமையும் ஓரளவு காரணமாகும்.

நான்கு முக்கிய உர வகைகளான யூரியா, அமோனியம் சல்பேட், மியூறியேட் பொட்டாசியம், சிறப்பு முக்கூட்டு பொசுப்பேற்று என்பன மீதான 30 சதவீத வளமாக்கி உதவுதொகை 1995 சனவரியில் நிறுத்தப்பட்டது. எனினும் யூரியா, சிறப்பு முக்கூட்டு பொசுப்பேற்று என்பனவற்றின் இறக்குமதி விலைகள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமையின் காரணமாக, இடைக்கால வழிமுறையாக, இவ்விருவளமாக்கி வகைகளுக்கும் 1995 பெப்புருவரி 1ஆம் நாள் தொடக்கம் 1995 ஏப்பிறல் 3 ஆம் நாள்வரையான காலப்பகுதிக்கு உதவுதொகை அறிமுகப்படுத்தப் பட்டது. இறக்குமதியாளர்களுக்கு செலுத்தப்பட்ட உதவுதொகை யூரியாவிற்கு மெற்றிக் தொன் ஒன்றுக்கு ஐ. அ. டொலர் 80 வீதத்திலும் சிறப்பு முக்கூட்டு பொசுப்பேற்றிற்கு ஐ. அ. டொலர் 20 வீதத்திலும் அமைந்திருந்தது. 1995 ஏப்பிறல் 4 ஆம் நாள் தொடக்கம் புதிய வளமாக்கி உதவுதொகைத் திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்பட்டது. இதற்கிணங்க 50. கி. கி. யூரியாவின் சந்தைவிலையை ரூ. 500 இலும் அமோனியம் சல்பேட்றின் சந்தை விலையை ரூ. 420 இலும் மியூறியேட் பொசுபேட்றின் சந்தை விலையை ரூ. 500 இலும் சிறப்பு முக்கூட்டு பொசுப்பேட்றின் சந்தை விலையை ரூ. 540 இலும் பேணும் பொருட்டு இறக்குமதியாளருக்குச் செலுத்தப்படவேண்டிய உதவுதொகை வீதங்களின்

அட்டவணை 3.9

பயிர்களின் படியான வளமாக்கிப் பயன்பாடு 1992 - 1995

('000 மெற்றிக் தொன்கள்)

| பயிர் | 1992 | 1993 | 1994(அ) | 1995 (ஆ) |
|---|---|---|---|---|
| 1. நெல் | 207.8 | 248.0 | 269.7 | 258.0 |
| 2. தேயிலை | 110.2 | 147.2 | 126.4 | 120.3 |
| 3. இறப்பர் | 13.1 | 17.9 | 17.2 | 14.9 |
| 4. தெங்கு | 34.3 | 35.1 | 31.2 | 33.6 |
| 5. சிறு உணவுப் பயிர்கள் | 49.5 | 44.3 | 40.6 | 39.5 |
| 6. சிறு ஏற்றுமதிப் பயிர்கள் | 7.1 | 7.0 | 5.6 | 5.2 |
| 7. ஏனையவை | 53.8 | 48.6 | 41.9 | 34.9 |
| மொத்தம் | 475.8 | 548.1 | 532.6 | 506.4 |


(அ) திருத்தியமைக்கப்பட்டது.　　　　மூலம் : தேசிய வளமாக்கிச் செயலகம்

(ஆ) தற்காலிகமானவை.

உச்ச எல்லை ஒரு மெற்றிக் தொன் யூரியாவிற்கு ஐ. அ. டொலர் 131 ஆகவும், ஒரு மெற்றிக் தென் அமோனியம் சல்பேட்டிற்கு ஐ. அ. டொலர் 29 ஆகவும் ஒரு மெற்றிக் தொன் மியூரியேட் பொசுபேட்டிற்கு ஐ. அ. டொலர் 19 ஆகவும் ஒரு மெற்றிக் தொன் சிறப்பு முக்கூட்டு பொசுபேட்டிற்கு ஐ. அ. டொலர் 59 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது. 1995 மேயில் யூரியாவின் இறக்குமதி விலை வீழ்ச்சியடைந்தவேளையில் உதவுதொகைக்கான உச்ச விலையும் மெற்றிக் தொன் ஒன்றிற்கு ஐ. அ. டொலர் 101 இற்கு சீராக்கம் செய்யப்பட்டதுடன் அதன்பின்னர் விலை அதிகரித்தபோது மெற்றிக் தொன் ஒன்றிற்கு ஐ. அ. டொலர் 131 இற்கு மீண்டும் சீராக்கப்பட்டது. தேசிய வளமாக்கிச் செயலகத்தின்படி இவ்வுதவுதொகைத் திட்டத்தின் செலவு ஆண்டொன்றிற்கு ரூ. 17,000 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் அசேதன வளமாக்கித் தேவையில் ஏறத்தாழ 95 சதவீதம் இறக்குமதி செய்யப்படுகிறது. வடமேல் மாகாணத்திலுள்ள எப்பாவெலவில் வரையறுக்கப்பட்ட லங்கா பொசுப்பேற்றினால் உற்பத்தி செய்யப்படும் பாறைப் பொசுப்பேற்றும், மத்திய மலைநாட்டில் சில அமைப்புக்களினால் தயாரிக்கப்படும் தொலைமற்றும் (வளமாக்கியிலும் பார்க்க வேறு பயன்பாடுகளுக்கு) மாத்திரமே உள்ளூரில் தயாரிக்கப்படும் அசேதன வளமாக்கி களாகவுள்ளன. 1995 இல் பாறைப் பொசுப்பேற்றின் உற்பத்தி 32,115 மெற்றிக் தொன்களுக்கு 20 சதவீதத்தினால் அதிகரித்து நீண்டகாலப் பயிர்களுக்கு முக்கியமாகப் பயன்படுத்தப்படும் இறக்குமதி செய்யப்பட்ட பாறைப் பொசுப்பேற்றிற்கு தொடர்ந்தும் பதிலீடாக விளங்கியது.

வரைபடம் 3.5
வளமாக்கிப் பயன்பாடு : முதன்மைப் பணிப்பாளர்
(1990 = 100)




வளமாக்கித்துறையில் வினைத்திறனையும் போட்டித்தன்மையினையும் முன்னேற்றும் பொருட்டு ஏறத்தாழ 10 மொத்த விற்பனை வர்த்தகர்களினால் மேற்கொள்ளப்படும் கிட்டத்தட்ட 40 சதவீத வளமாக்கி விற்பனைக்குத் தற்பொழுது வகைகூறும் தனியார் துறையின் பங்களிப்பை அரசு ஊக்குவித்துள்ளது.

## விதைகள்

உயர்தர விதைகளினதும் பயிரிடல் பொருட்களினதும் பயன்பாடு விளைச்சலையும் வேளாண்மையாளர் வருமானத்தையும் அதிகரிக்கின்றது. வேளாண்மைத் திணைக்களத்தின் விதை மற்றும் பயிரிடல் பொருட்கள் நிலையம் நாட்டின் மொத்த வகைத் தேவையில் 5 – 10 சதவீதத்தினை மட்டுமே உற்பத்தி செய்யக்கூடியதாக இருந்தது. ஆகவே வேளாண்மைத் திணைக்களம் சான்றுரைக்கப்பட்ட

தர விதையை உற்பத்தி செய்வதற்கு வேளாண்மையாளர்களையும் தனியார் துறையினரையும் ஊக்குவித்து வசதியளிக்கின்றது. ப. அ. ஐ. நா. முகவரினால் நிதியிடப்பட பன்முகப்படுத்தப்பட்ட வேளாண்மை ஆராய்ச்சிச் செயற்றிட்டத்தின் கீழ் பெரிய, சிறிய அளவு வியாபாரங்கள் இரண்டினையும் உள்ளடக்குகின்ற தனியார்துறை, அதேபோன்று வேளாண்மையாளர் அமைப்புக்கள், கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியன உள்ளூர் விதைக் கைத்தொழிலின் அபிவிருத்திக்கு பங்களிக்கக் கூடியனவாக இருந்தன. பொருளாதார தாராளமயமாக்கல் காரணமாக, உள்நாட்டு விதைக் கைத்தொழில் உள்நாட்டுத் தேவைகளை ஈடுசெய்யமுடியாததாக இருக்கின்றவிடத்து, பயிர்நோய் தடுப்பிற்கு உட்பட்ட விதத்தில், தனியார்துறை விதைகளின் முக்கிய இறக்குமதியாளராகவும் பங்கீட்டாளர்களாகவும் மாறிவருகின்றது. இது தனியார்துறையின் தீவிரமான பங்கேற்புடன் உள்நாட்டு விதைக்கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் பொருட்டு தேசிய விதைக் கொள்கைக்கான தேவையை வலியுறுத்துவதாக வுள்ளது.

1995 இல் வேளாண்மைத் திணைக்களத்தின் விதை மற்றும் பயிரிடல் பொருட்கள் நிலையம் 4,100 மெற்றிக் தொன்களுக்கு (198,000 புசல்கள்) மேற்பட்ட விதை நெல்லையும், சோளம் (62,000 கி கி.), சோயா அவரை (13,000 கிகி), பயறு (12,000 கிகி) போன்ற ஏனைய களப்பயிர் வகைகளின் விதைப்பொருட்களையும் வழங்கக் கூடியதாக இருந்தது.

1995 இல் வேளாண்மைத் திணைக்களத்தின் ஆராய்ச்சி நடவடிக்கைகள் வெளியீட்டிற்கான உள்ளூர் பசுமதி வகைக்கு மேலதிகமாக, 3 1/2 - 5 மாதங்களுக்கிடையில் வேறுபடும் பல புதிய அரிசி வகைகளை இனங்காண்பதற்கு வழிவகுத்தன. வேளாண்மைத் திணைக்களம் சிறந்த விளைச்சல்கள், நீண்டகாலம் களஞ்சியப்படுத்தி வைக்கக்கூடிய தன்மை, உயர்ந்த நோய் எதிர்ப்புத்தன்மை, வரட்சியிலிருந்தும் தப்பக்கூடிய ஆற்றல் போன்ற பண்புகளைக் கொண்ட பல புதியவகை மற்றைய களப்பயிர்களையும் (மிளகாய், பயறு, விரைவில் முற்றிவிடும் தட்டைப்பயறுவகை) இனங்காணக் கூடியதாக இருந்தது. மேலும் வேளாண்மைத் திணைக்களம் மிகச்சிறந்த விளைச்சல்களையும் குறிப்பிட்ட நோய்க்கிருமிகளுக்கெதிரான தாங்கும் சக்தியையும் சுய வாழ்வையும் கொண்டிருக்கும் காய்கறி, பழங்களின் சிறந்த வகைகளை இனங்கண்டுள்ளது.

## வேளாண்மை இரசாயனங்கள்

பூச்சி கொல்லிகள், களைக்கொல்லிகள், பங்கசுகள் என்பனவற்றை உள்ளடக்கிய வேளாண்மை இரசாயனங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் தனியார்துறையும் இவ்வுற்பத்திகளின் இறக்குமதி யாளர்களாக இருந்தனர். மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனைகள் முக்கியமாக தனியார்துறையினால் மேற்கொள்ளப்பட்டன. அனைத்து வேளாண்மை இரசாயன இறக்குமதிகளும், வேளாண்மைத் திணைக்களத்தின் பூச்சி கொல்லிகள் பதிவாளருடன் பதிவுசெய்யப்பட்டனவாக இருக்கவேண்டும்.

பூச்சிக் கொல்லிகள் பதிவாளரின்படி, 1995 இல் வேளாண்மை இரசாயனங்களின் மொத்த விற்பனைகள் 6,740 மெற்றிக் தொன்களுக்கு 13 சதவீதத்தினால் அதிகரித்தன. மொத்த வேளாண்மை இரசாயனங்களின் விற்பனையில் ஏறத்தாழ 45 சதவீதத்திற்கு வகைகூறும் களைக் கொல்லிகளின் விற்பனைகள் 3,043 மெற்றிக் தொன்களுக்கு 10 சதவீதத்தினால் உயர்வடைந்தன. அதிகரித்துச் செல்லும் தொழிலாளர் கூலிகள், தொழிலாளர்களின் அருமைத்தன்மை என்பனவற்றின் காரணமாக கடந்த ஆண்டுகளில் களைக் கொல்லிகளின் பாவனை அதிகரித்துள்ளமையானது கைகளினால் களையெடுப்பதற்குப் பதிலாக வேளாண்மையாளர்கள் இரசாயன களைக்கொல்லிகளுக்கு மாறிவிட்டமையை எடுத்துக்காட்டுகின்றது. , மொத்த வேளாண்மை இரசாயன விற்பனைகளில் ஏறத்தாழ 42 சதவீதத்திற்கு வகைகூறும் பூச்சிக்கொல்லிகள் 2,843 மெற்றிக் தொன்களுக்கு 21 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் மொத்த வேளாண்மை இரசாயன விற்பனைகளில் ஏறத்தாழ 13 சதவீதத்திற்கு வகைகூறிய பங்கசு கொல்லிகளின் விற்பனைகள் 1995 இல் சிறிதளவால் அதிகரித்தன.

வேளாண்மை இரசாயனத்திற்கான கேள்வி அதிகரிப்பதனால் உற்பத்திச் செலவினைக்குறைத்தல், சுற்றாடல் பாதுகாப்பு, மற்றும் உடல்நலம்/ பாதுகாப்புக்கரிசனைகள் போன்றவற்றினைக் கருத்திற்கொண்டு ஒருங்கிணைக்கப்பட்ட பூச்சி முகாமைத்துவ முறையொன்றின் தேவை இப்பொழுது வலியுறுத்தப்படுகின்றது.

## கொடுகடன்

1994/95 பயிர்ச் செய்கையாண்டில் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன்

திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பயிர்ச்செய்கைக் கடன்கள் முன்னைய பயிர்ச்செய்கையாண்டில் வழங்கப்பட்ட ரூ. 9,770 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 11,800 இலட்சமாக விளங்கியது.

செலுத்தத்தவறிய முதல்தொகையில் 25 சதவீதம் மீளச் செலுத்தப்பட வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு கடந்தகாலப் பயிர்ச்செய்கைக் கடன்களைப் பதிவழிப்பதற்கு 1994 செத்தெம்பரில் அரசு எடுத்த தீர்மானம் புதிய பயிர்ச் செய்கைக் கடன்களுக்கு பெருமளவு வேளாண்மையாளர்களைத் தகைமையுடையதாக்கியது. 1994/95 பயிர்ச்செய்கை யாண்டில் பெறப்பட்ட கடன்களில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டமைக்கான காரணத்தை இது விளக்குகின்றது. இதுபோன்ற பொதுமன்னிப்புக்கள் கடன்மீள் கொடுப்பனவுப்பண்புகளில் பல பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடுமாகையால் இது விரும்பத்தக்கதொன்றல்ல.

இவ்வாண்டில் வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் 67 சதவீதம் அல்லது ரூ. 7,910 இலட்சம் 1994/95 பெரும்போகத்தில் வழங்கப்பட்ட வேளையில் மிகுதி ரூ. 3,890 இலட்சம் 1995 சிறுபோகத்தில் வழங்கப்பட்டது. 1994/95 பெரும்போகத்தில் வழங்கப்பட்ட கடன்கள் முன்னைய பெரும்போகத்துடன் ஒப்பிடுகையில் 25 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் 1995 சிறுபோகத்தில் வழங்கப்பட்ட கடன்கள் முன்னைய சிறு போகத்தின் கடன்களைவிட 13 சதவீதத்தினால் அதிகரித்தன. பயிர்ச்செய்கையாண்டில் வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் 68 சதவீதம் அல்லது ரூ. 8,,060 இலட்சம் நெற்றுறைக்கு வழங்கப்பட்டவேளையில் மிகுதி ரூ. 3,740 இலட்சமும் ஏனைய களப்பயிர்களின் பயிர்ச்செய்கைக்காக வழங்கப்பட்டன. இரு அரச வங்கிகளும் சேர்ந்து பயிர்ச்செய்கைக் கடன்களில் 80 சதவீதத்திற்கு அல்லது ரூ. 9,430 இலட்சத்திற்கு வகைகூறின.

முறைசார்ந்த நிதியியல்துறை கிராமிய வேளாண்மைத்துறைக்கு வழங்கிய பயிர்ச்செய்கைக் கடன்களின் அளவு அதிகரித்துள்ளபோதும் இத்துறையின் கொடுகடன் தேவையில் பெரும்பகுதியை ஈடுசெய்வதற்கு முறைசாரா நிதி மூலங்களிலேயே இன்னமும் பெருமளவிற்குத் தங்கியுள்ளது.

### 3.7. காடாக்கல்

காடாக்கல் திணைக்களத்தின்படி, 1994 இல் காடு ஏறத்தாழ 20 இலட்சம் எக்டேயர்களை உள்ளடக்கியுள்ளது. இது மொத்த நிலப்பரப்பில் ஏறத்தாழ 31 சதவீதமாகும். தேறிய வருடாந்த சராசரி காடழித்தல் 38,000 எக்டேயர்களென மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு முன்னெப்பொழுதும் இல்லாதவாறு குடித்தொகை விரிவடைந்து செல்கின்றமை, அதிகரிக்கின்ற பொருளாதார நடவடிக்கை என்பனவற்றினால் காட்டு மூலவளங்கள் மீதான அதிகரிக்கின்ற கேள்வியே காரணமாகும். வேளாண்மை, காணி, காடாக்கல் அமைச்சின்படி தற்போதைய காடழித்தல்போக்கு தொடருமாயின் காடுகள் என வரைவிலக்கணம் செய்யப்பட்ட 70 சதவீத மேற்பரப்பை மூடியுள்ள அடர்ந்தகாடுகள் 1992 இன் மொத்த நிலப்பரப்பின் 24 சதவீதத்திலிருந்து 2020 ஆம் ஆண்டளவில் ஏறத்தாழ 17 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையக்கூடும். உறுதியான அடிப்படையில் குடித்தொகையின் தேவையை ஈடுசெய்வதற்கான இதன் இயலளவு படிப்படியாக குறைந்து செல்லுகின்ற தன்மையே எதிர்பார்க்கப்படுவதானால் காட்டுத்துறை தொடர்பான நோக்கில் இது தெளிவற்ற தன்மையையே எடுத்துக்காட்டுகின்றது.

வேளாண்மை, காணி, காடாக்கல் அமைச்சினால் அடையாளம் காணப்பட்டவாறு காடழிப்பிற்கான முக்கிய காரணங்களாக நிலமற்றதன்மையும், மோசமாக காணி சுயாதீனப்படுத்தும் முறையும், பாரிய வேளாண்மை குடியேற்றல் செயற்றிட்டங்கள், நீர்த்தேக்கம் மற்றும் நீர்மின்வலு செயற்றிட்டங்கள், சேனைப் (பெயர்ச்சிப்) பயிர்ச்செய்கை, இயற்கையான காடுகளை ஏனைய பயிர்களுக்கு மாற்றுதல், காட்டு உற்பத்திகளை மிகையாக அறுவடை செய்தல் என்பன விளங்குகின்றன. காடழித்தல் மற்றும் காடு சிதைவுறுதல் என்பனவற்றின் விளைவாக தோன்றக்கூடிய கடுமையான பிரச்சினைகள் யாதெனில் உயிரினப் பெருக்கம் குறைவடைதல் (காட்டு விலங்குகளின் இயல்பான வாழ்வும், மரங்களும் அழிந்துவிடுவதன் காரணமாக) ஒழுங்கற்ற நீர்வழங்கல், நீர்ப்பாசனக் கால்வாய்கள் மற்றும் நீர்த்தேக்கங்கங்களின் குறைவான பாவனைக்காலம் மண்அரிப்பு அதன் விளைவாக குறைவடையும் வளம், மரநிரம்பலில் ஏற்பட்ட பற்றாக்குறையும் என்பனவாகும். இவை வேளாண்மை உற்பத்தியின்மீது எதிர்மறைத் தாக்கத்தைக் கொண்டிருக்கும்.

வேளாண்மை, காணி, காடாக்கல் அமைச்சின் தேசிய கொள்கை வரவுத் திட்டத்தில் இனங்காணப்பட்டவாறு, தற்பொழுது மிக அவசரமான தேவை தேசிய காணிப்பயன்பாட்டுக் கொள்கையொன்றை வகுப்பதேயாகும். இது வேளாண்மை அபிவிருத்தி மற்றும் குடியேற்றக்

கொள்கைகளை நெறிப்படுத்தக்கூடியதாக இருக்குமாகையால் சமகாலத்தில் உயிரினங்கள் பாதுகாக்கப்படும். நீர் வளங்கள் பேணப்படும், நிலமற்றோருக்கு நிலங்கள் வழங்கப்படும் மற்றும் காடாக்கல் உற்பத்திகள் போதுமானளவிற்கு நிரம்பல் செய்யப்படும். 1995 இல் தேசிய காடாக்கல் கொள்கை அரசினால் அங்கீகரிக்கப்பட்டது. காடாக்கல் துறையில் விரும்பத்தக்கதான அபிவிருத்தியை எய்தும் நோக்குடன், 1995 – 2020 காலப்பகுதியை உள்ளடக்கிய காடாக்கல்துறை முதன்மைத் திட்டம் எனக்குறிப்பிடப்படும் அனைத்தையும் உள்ளடக்கியதாக நீண்டகால அபிவிருத்தி வரைச்சட்டமொன்று 1995 இல் வேளாண்மைக் காணி, காடாக்கள் அமைச்சினால் வரையப்பட்டது. காடாக்கல்துறை முதன்மைத்திட்டம் குறிப்பாக உயிரினப் பாதுகாப்பினைப் பேணுவதற்காக எஞ்சியுள்ள இயற்கைக் காடுகளைப் பாதுகாப்பதனை வலியுறுத்துகின்றவேளையில் பொதுவான காட்டு வளர்ப்பை அதிகரிக்கின்றதுடன் கிராமியக் குடித்தொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக (விறகு, மரம் போன்றவை) பல்நோக்கு பயன்பாட்டுக் காடுகளை முகாமை செய்து பாதுகாக்கின்ற அதிகாரத்தினை குறிப்பாக கிராமிய சமூகங்களுக்கு அளிக்கின்றது. விரைவான காடழித்தலை கட்டுப்படுத்தும் பொருட்டு காட்டுத்துறை முதன்மைத் திட்டம் ஆண்டுதோறும் ஏறத்தாழ 3,000 எக்டேயர் கொண்ட காட்டு வளர்ப்பினை ஏற்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளது. 2,000 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் ஏறத்தாழ 200 எக்டேயர்கள் அடர்ந்த காடுகளும் 1,000 எக்டேயர்கள் அடர்த்தியற்ற மற்றும் வெப்பக்காடுகளும் மீண்டும் வளர்க்கப்படவுள்ளதுடன் ஏறத்தாழ 4,000 எக்டேயர்கள் மீண்டும் காடாக்கப்படும்.

1995 இல் காட்டுத்திணைக்களம் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு, கடல்கடந்த அபிவிருத்தி நிருவாகம் என்பனவற்றிலிருந்தான உதவியுடன் 82 இலட்சம் விதைகளை சேகரிக்கக்கூடியதாகவும் 23,864 எக்டேயர் காட்டு வளர்ப்பைப் பேணக்கூடியதாகவும் இருந்ததுடன் 11,481 எக்டேயர் அடர்ந்த காட்டில் காட்டு வளர்ப்புக்களைப் பேணப்படுவதனையும் கவனித்தது. பங்கேற்புக் காடாக்கல் செயற்றிட்டத்தின் கீழ் (குறிப்பாக விறகு, மற்றும் பொதுவான பயன்பாட்டிற்குரிய மரம் என்பனவற்றை பெற்றுக் கொள்வதற்கு) காட்டுத் திணைக்களம் வீடுகளைச் சூழவுள்ள இடங்களிலும் துண்டுக்காணிகளிலும் ஏறத்தாழ 6,900 எக்டேயர்களில் மரங்களைப் பயிரிட வேளாண்மையாளர் உள்ளிட்ட 51,000 இற்கு மேற்பட்ட குடும்பங்களை ஈடுபடுத்தக்கூடியதாக இருந்த வேளையில் வீதியோரங்களிலும், ஆறுகள் மற்றும் கால்வாய் மருங்குகளிலும் 127 கிலோமீற்றர் நீளத்திற்கு நீண்ட ஒடுங்கிய மரங்களைப் பயிரிடக் கூடியதாகவும் இருந்தது. இச்செயற்றிட்டத்தின்கீழ் காட்டுத்திணைக் களம் பள்ளிக் கூடங்கள், அரசுசார்பற்ற அமைப்புக்கள், வேளாண்மைப்பணி நிலையங்கள், வேளாண்மையாளர் அமைப்புக்கள், என்பனவற்றின் ஒத்துழைப்புடன் 44 இலட்சம் மரக்கன்றுகளை நாட்டக்கூடியதாக இருந்தது. காடாக்கல் விரிவாக்கத்திட்டம் 12 இலட்சததிற்கும் கூடுதலான மரங்களை வளர்த்தது. பல்வேறுபட்ட இந்நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் காடாக்கல் திணைக்களம் இவ்வாண்டிற்கான வருடாந்த இலக்கில் ஏறத்தாழ 85 சதவீதத்தினை அடையக்கூடியதாக இருந்தது. அத்துடன் காட்டுத்திணைக்களம் மீள்காடாக்கல் மற்றும் காட்டு விரிவாக்கம் என்பனபற்றிய அறிவாற்றலை ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களையும் நடத்தக்கூடியதாக இருந்தது.

காட்டுத்திணைக்களத்தின்படி, 1995 இல் 5,191 களவாக மரம் வெட்டுவோர் கண்டு பிடிக்கப்பட்டதுடன் இது ரூ. 293 இலட்சம் பெறுமதிகொண்ட 27 இலட்சம் கனமீற்றர் மரங்களுடன் தொடர்புடையதாக இருந்தது. இது காடழித்தல் அளவினை, அதிகார பூர்வமான பதிவுகளை மட்டுமே எடுத்தக்காட்டு கின்றவேளையில் கணிசமான அளவு கண்டுபிடிக்கப்படாமலே போயுள்ளன.

1995 இல் காடாக்கல் துறையிலுள்ள சுற்றாடல் முகாமைத்துவத்தின் செயற்றிட்டங்கள் தேசிய பாதுகாப்பு ஆய்வு அளவீடு (இது அனைத்து இயற்கை காடுகளிலுமுள்ள உயிரினப் பரம்பலை மதிப்பிடுகிறது) சிங்கராசாக் காட்டுப் பாதுகாப்புச் செயற்றிட்டம் நக்கிள்ஸ் பாதுகாப்புச் செயற்றிட்டம்; வெப்ப வலய காடுகளின் பாதுகாப்பு செயற்றிட்டம் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது. காட்டுத்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இவ்வாண்டில் பல்வேறு ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவை மரங்களை முன்னேற்றுதல், கீழ்ப்பயிரிடல், தேக்குமரங்களைப் பயிரிடல் வளமாக்கிப்பாவனை மற்றும் தீயைக் கட்டப்படுத்தும் முறைகள் என்பன தொடர்பான மாதிரிப் பரிசோதனைகளையும் உள்ளடக்கும்.